பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 05 வெள்ளிக்கிழமை 20.11.2020 கதிர் 15

**இனி இது ரகசியம் அல்ல!**

மீண்டும் இருண்டயுகம் வருமா? போகின்ற போக்கு அப்படி ஒரு சந்தேகத்தைத்தான் தந்து நிற்கின்றது.

அடக்குமுறை ஆட்சியின் முதல் நடவடிக்கை ஊடக அடக்குமுறையாகத்தான் இருக்கும்.

கடந்த இருண்ட பக்கம் 02

# பேச்சுக் குறித்து சுமந்திரனுடன் கோட்டாவும் மஹிந்தவும் பேச்சு



## விரைவில் ஆரம்பிக்கவும் முடிவு



தமிழர் தரப்புக்கும் புதிய ஆட்சிப் பீடத்துக்கும் இடையிலான பேச்சுக்களை விரைவில் ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

நேற்று நாடாளுமன்ற வளாகத்தில் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனுடன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவும் உரையாடிய சமயம் பேச்சுக்களை விரைவில் ஆரம்பிப்பது குறித்து இரு தரப்பினரும் பேசிக் கொண்டனர் என அறிய வந்தது.

பேச்சுக்கான அழைப்பும் திகதி, நேரம் பற்றிய விவரங்களும் ஜனாதிபதியால் விடுக்கப்பட்டதும் பேச்சு ஆரம்பமாகும் எனத் தெரிகின்றது. பக்கம் 02

## கொரோனா பலியெடுப்பு 73 நேற்றும் நால்வர் உயிரிழப்பு

### மேலும் 437 பேருக்குத் தொற்று உறுதி

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்றும் 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 73 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் நேற்றும் 437 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 18 ஆயிரத்து 841 ஆக அதிகரித்துள்ளது.

அவர்களில் 12 ஆயிரத்து 903 பேர் குணமடைந்துள்ளனர். 5 ஆயிரத்து 865 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## நாடாளுமன்றத்துக்கு கோட்டா திடீர் விஜயம்

### மங்கள அமர்வுக்குப் பின் முதல் தடவையாக



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடாளுமன்றத்துக்கு நேற்று திடீரென விஜயம் மேற்கொண்டார்.

9ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது மங்கள அமர்வை ஆரம்பித்து வைத்ததன் பின்னர் ஜனாதிபதி முதல் தடவையாக நேற்று முற்பகல் 11.40 மணியளவில் பக்கம் 02

## வவுனியாவில் விமானப் படையினர் பத்துப் பேருக்குத் தொற்று உறுதி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் போதான வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட கொரோனா பரிசோதனையில் 10 பேருக்குத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

நேற்று யாழ். போதனா வைத்திய சாலை ஆய்வுகூடத்தில் 293 பேருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது.

"வவுனியா தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருக்கும் விமானப் படையைச் சேர்ந்த 10 பேருக்கு தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

நேற்றைய பக்கம் 02


## ஜெனீவாத் தொடரைக் கையாள விக்கியும் குழு அமைக்கின்றார்

கொழும்பு, நவ. 20

தமிழரின் தேசியப் பிரச்சினைகளைக் கையாள்வதற்கு 'தமிழ்த் தேசிய கவுன்ஸில்' ஒன்றை அமைப்பது குறித்து தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா அறிவித்தமை போல - வரவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் ஜெனீவாக் கூட்டத் தொடரைக் கையாள்வதற்கு நீதியரசர் விக்னேஸ்வரன் தரப்பும் ஓர் ஆராய்வுக் குழுவை நியமிக்கும் ஏற்பாடுகளில் இறங்கியுள்ளது. பக்கம் 02

## பாதுகாப்புக்கு ஏன் இவ்வளவு நிதி? யாருடன் போர் தொடுக்க? தமிழர்களுடனா? இந்தியாவுடனா? மேற்கு நாட்டவர்களுடனா?

### 'பட்ஜட்' மீதான விவாதத்தில் கேள்விகளால் துளைத்தெடுத்தார் விக்கி



நாட்டில் 11 வருடங்களுக்கு முன் போர் முடிவுக்கு வந்துவிட்டது. இந்நிலையில், அவசியமான துறைகளுக்கு நிதி ஒதுக்க வேண்டிய நேரத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கே அதிகமான நிதியை அரசு ஒதுக்கி வருகின்றது. இதனூடாக இந்த அரசு இன்னொரு போரை எதிர்பார்க்கின்றதா? அவ்வாறு ஒரு போர் என்றால் அது தமிழர்களுடனா? இந்தியாவுடனா? மேற்கு நாடுகளுடனா? யாரைப் பார்த்து அரசு அஞ்சுகின்றது?

- இவ்வாறு சபையில் நேற்று அடுக்கடுக்கான கேள்விகளைத் தொடுத்தார் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசு 2021ஆம் பக்கம் 02

## தமிழ்த் தேசியக் கட்சிகளின் கூட்டு உருவாகின்றமையை சில கட்சிகளின் தனிநபர்கள் அழியோடு விரும்பவில்லை!

### விசனம் தெரிவிக்கின்றார் சுரேஷ் பிறேமச்சந்திரன்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,நவ. 20

தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு இடையிலான கூட்டணி உருவாகுவதை சில கட்சிகளின் தனிநபர்கள் சிலர் விரும்ப வில்லை என ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி முக்கியஸ்தருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

புதிய கூட்டணி உருவாக்கம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேட்ட பக்கம் 02

## டிப்பர் - ஓட்டோ விபத்தில் காயமுற்ற சிறுமி மரணம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.20

கிளிநொச்சி, பூநகரிப் பகுதியில் ஓட்டோவில் பயணித்த நேரம் டிப்பருடன் மோதியதில் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்றுவந்த 6 வயதுச் சிறுமி பரிதாபகரமாக உயிரிழந்தார்.

நந்தகுமார் நிதிலா பக்கம் 02

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
யுக ஆட்சியிலும் அதுதான் நிகழ்ந்தது.

வடக்கு ஊடகவியலாளர்களுக்கு இது அனுபவப் பாடம். இலங்கைக்கு 'அமைதி காக்கும்' படையாக வந்த இந்தியத் துருப்புகள், புலிகளுடன் யுத்தத்தை ஆம்பித்த போது முதல் செய்தது என்ன தெரியுமா? 'ஈழமுரசு', 'முரசொலி' பத்திரிகைகளின் பணிமனைகளுக்கு – அச்சு இயந்திரங்களுக்கு – குண்டு வைத்தமைதான்.

அடக்குமுறையில் முதல் இலக்கு ஊடகங்கள் தாம்.

அரசமைப்பின் 20ஆவது திருத்தம் மூலம் எல்லையற்ற அதிகாரங்களை சுவீகரித்திருக்கும் ஜனாதிபதி கோட்டாபயவின் கவனமும் ஊடகங்கள் பக்கம் திரும்பியிருப்பதாகத் தெரிகின்றது. குறிப்பாக சமூக ஊடகங்களின் பக்கம்.

நேற்று முன்தினம் நாட்டு மக்களுக்கு அவர் ஆற்றிய உரையில் அப்பட்டமாக – வெளிப்படையாக – சமூக ஊடகத்தின் மீதான சீற்றம் தெரிந்தது.

*"எனது வெற்றி அல்லது தோல்வியை அளவிடுவதற்கான சிறந்த அளவுகோல் மக்கள் கருத்தேயன்றி, சமூக ஊடகங்கள் மூலம் அரசியல் எதிரிகளால் பரப்பப்படும் தவறான பிரசாரங்கள் அல்ல"* – என்று அந்த உரையில் குறிப்பிட்டதன் மூலம் சமூக ஊடகங்கள் மீதான தன் சீற்றத்தை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

இப்போது சமூக ஊடகங்கள் மீது புலனாய்வுப் பிரிவின் கழுகுக் கண்கள் வீழ்ந்திருக்கின்றன.

அந்த வரிசையில் ஒரு சம்பவம் இப்போது நடந்திருக்கின்றது.

பௌத்த, சிங்களவர்கள் வாழ்வில் பிக்குகளுக்கு உரிய உயரிய இடம் தெரிந்தது தான். ஜனாதிபதியானாலும் அவர்களுக்கு முன்னால் வீழ்ந்து வணங்க வேண்டியவர்கள்தான்.

எந்தப் பெரிய நபராக இருந்தாலும் பிக்குகள், தேரர்கள் வந்தால் வெள்ளைத் துணி போர்த்திய நாற்காலியில் அமர இடமளித்து அவர் தாள் பணிய வேண்டும். பவ்வியமாகத் தானம் கொடுக்க வேண்டும்.

அப்படி இருக்கையில், அநுராதபுரம் பகுதியில் ஒரு முக்கிய விஹாரைக்கு உள்ளே – மூடிய அறையில் – நடந்த விருந்துபசாரம் என்ற பெயரில் ஒரு படம் சமூக ஊடகங்களில் உலவ விடப்பட்டிருக்கின்றது.

இரண்டு ராஜபக்ஷக்களும் தத்தம் துணைவியார் சகிதம் அமர்ந்திருந்து ஒரு வெட்டு வெட்டிக் கொண்டிருக்கின்றார்கள். மற்றொரு அரசியல்வாதியும் கூட அமர்ந்திருக்கின்றார். சங்கைக்குரிய பிக்குகள் எழுந்து நின்றபடி பரிமாறிக் கொண்டிருக்கின்றார்கள்.

*'யார், யாருக்கு 'தானம்' கொடுக்கின்றார்கள்? யார் தானம் பெறுகின்றார்கள்?"* – என்ற தலைப்புடன் திடீரென சமூக ஊடகங்களில் உலாவரத் தொடங்கியிருக்கும் இந்தப் படத்தினால் அதி உத்தமர் அதி உச்சக் கோபத்தில் இருக்கின்றார் என்று கேள்வி.

செய்தி, பட மூலங்களைப் புலனாய்வுப் பிரிவு தேடித் துருவத் தொடங்கியிருக்கின்றது.

இந்தப் படத்தை தமது சமூக வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்த – சம்பிக்க ரணவக்கவின் உதவியாளர் ஒருவர் ஏற்கனவே விசாரணை வலைக்குள் என்றும் தகவல்.

படம் பிடிக்கக் கூடாது என்று கூறியிருக்க, உள்ளே படம் பிடித்தவர் யார் எனத் துருவுகின்றனர் என்றும் ஒரு கேள்வி.

இது ஒறிஜினல் படம் அல்ல, வெட்டிப் பொருத்தி கிரிமினல் மூளை மூலம் தயாராக பண்ணப்பட்ட கில்லாடிப் படம் என்று 'சமாளிபிக்கேஷன்' செய்யலாமா என்று ஆலோசனையும நடக்கின்றதாம்.

இந்தப் படம் குறித்து அதிகம் விவரித்து, விசாரணை வலைக்குள் நானும் சிக்கிக் கொள்ளத் தயாராகவில்லை.

அதனால் இன்று இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன். நாளை மேல் விவரம் வாசர்களுக்களே...!

–மின்னல் –

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பரிசோதனையில் வடக்கு மாகாணத்தில் ஏனையவர்களுக்குக் கொரோனாத் தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் கூறினார்.

ஆனால் வவுனியா விமானப் படைத்தளத்தை ஒட்டியுள்ள தனிமைப்படுத்தல் நிலையத்தில் வெளிநாட்டில் இருந்து வந்திருந்த பத்துப் பேருக்கே தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாக வேறு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

## பாதுகாப்புக்கு ஏன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஆண்டுக்கான பாதுகாப்புச் செலவுக்கு அபரிதமான தொகையை ஒதுக்கியுள்ளது. எதற்காக இவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது? யாருடன் போரை மேற்கொள்ள இந்த நிதித் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது? இன்னொரு போரை எதிர்பார்த்தா அரசு இந்தத் தொகையைப் பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கியுள்ளது? அப்படி போர் என்றால் யாருடன்? அந்தப் போர் தமிழர்களுடனா அல்லது இந்தியர்களுடனா அல்லது மேற்கத்தைய நாட்டவர்களுடனா? யாரைப் பார்த்து இந்த அரசு அஞ்சுகின்றது.

எதற்காகப் போர்க்கால வரவு – செலவுத் திட்டமொன்றை சமாதான காலத்தில் முன் வைத்துள்ளீர்கள்? என்னைப் பொறுத்த வரை இந்த வரவு – செலவு திட்டத்தில் குறைந்த நிதியைப் பாதுகாப்புக்கும், அதிகளவு நிதியை நுண் பொருளாதார மற்றும் நடுத்தர வர்த்தக செயற்பாடுகளுக்கு ஒதுக்கியிருக்க வேண்டும்.

நீங்கள் உங்கள் முகத்துடன் கோபித்துக்கொண்டு உங்கள் மூக்கை வெட்டப்பார்க்கின்றீர்கள். நாட்டின் ஒரு சாராரை சந்தேகக்கண் கொண்டு பார்ப்பதால்தான் போர்க் கருவிகள், பீரங்கிகள், தற்பாது காப்புக் கவசங்களை வாங்கிக் குவிக்கின்றீர்கள்.

காலாட் படைகளை அதிகரிக்கின்றீர்கள். பெரும் தொகை கடற்படை உபகரணங்களை வாங்குகின்றீர்கள். இதுவரை கண் மண் தெரியாமல் வாங்கிக் குவித்ததால் தானே எமது தேசியக் கடன் இந்தளவுக்கு உயர்ந்துள்ளது?

2021ஆம் ஆண்டில் நீங்கள் எதிர்பார்க்கும் வருமானம் 1.9 ட்ரில்லியன் ரூபா. உத்தேச செலவு என்றுமில்லாதவாறு 3.52 ட்ரில்லியன் ரூபாவாக உயரப் போகின்றது. 1.56 ட்ரில்லியன் ரூபா விழுக்காட்டை எப்படி சமாளிக்க போகின்றீர்கள்? இது நீங்கள் தமிழர்களை நம்பாததால் வந்த வினை. உங்கள் தேசியக் கடன் எங்களையும் பாதிக்கின்றது என்பதை மறந்து விடாதீர்கள்.

விரைவில் உங்களை நம்பத்தகுந்த கடன் கேட்பவர்களாக நாடுகள், நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஏற்கனவே இருக்கும் கடனை அடைக்க முடியாது நீங்கள் தவிக்கின்றீர்கள்.

எவ்வாறு மேலும் கடன் தர முடியும் எனக் கேட்பார்கள். தமிழர்களை நம்பி அவர்களின் பிரச்சினைகளைத் தெரிந்து கொண்டு அவர்களுக்குரிய தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டிய காலம் மலர்ந்துள்ளது. நாம் நாட்டைப் பிரித்துத் தருமாறு கேட்கவில்லை.

ஒரே நாட்டுக்குள் எம்மை நாமே ஆள வழி விடுங்கள் என்றே கேட்கின்றோம். அவ்வாறு செய்தால் நாமும் எமது இலட்சக்கணக்கான புலம்பெயர் தமிழ் உறவுகளும் உங்களுடன் சேர்ந்து இந்த நாட்டை முன்னேற்றத் தயாராகவுள்ளோம்.

வடக்கு, கிழக்கின் அபிவிருத்திகள் குறித்து அரசு கூடிய கவனம் செலுத்தியிருக்க வேண்டும். போர் முடிந்து 11 வருடங்கள் நிறைவடைந்துள்ள போதிலும் வடக்கு, கிழக்கிலுள்ள மாவட்டங்கள் இன்னமும் வறுமையான மாவட்டங்களாகக் காணப்படுகின்றன. எனவே, வேலைவாய்ப்புகள், அபிவிருத்திகள் என்பவற்றுக்கு அதிக கவனம் செலுத்தியிருக்க வேண்டும். எனவே, இதுகால வரையும் சிந்தித்த வழியிலேயே சிந்திக்காது புதுவிதமாகச் சிந்திக்கப் பழகுங்கள் – என்றார்.

## நாடாளுமன்றத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சபைக்குள் வந்தார்.

வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இரண்டாவது நாள் விவாதம் இடம்பெற்றுக்கொண்டிருந்த நிலையிலேயே அவர் அங்கு வந்தார்

ஜனாதிபதி சபைக்குள் வரும்போது ஆளுங்கட்சி உறுப்பினர்கள் ஆசனங்களில் இருந்து எழுந்து நின்று மேசையில் கைகளைத் தட்டி வரவேற்றனர்.

சபையில் தனக்குரிய ஆசனத்தில் ஜனாதிபதி அமர்ந்துகொண்டார். அவருக்கு அருகில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் அமர்ந்திருந்தார்.

எதிர்க்கட்சி உறுப்பினரான ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க, ஆளுங்கட்சி உறுப்பினர்களான இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க மற்றும் யாமினி குணவர்தன ஆகியோரின் உரைகளை சபையில் இருந்துகொண்டு ஜனாதிபதி செவிமடுத்தார்.

பிற்பகல் 12.20 மணியளவில் எதிர்க்கட்சி உறுப்பினரான ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் உரையாற்ற ஆரம்பிக்கும்போது சபையில் இருந்து ஜனாதிபதி வெளியேறிச் சென்றார்.

அதன்பின்னர் பிரதமர், அமைச்சர்கள் மற்றும் ஆளுங்கட்சி உறுப்பினர்களுடன் உறுப்பினர்களின் உணவகத்துக்குச் சென்று மதிய போசனத்தில் கலந்து கொண்டார்.

அதனைத் தொடர்ந்து பிற்பகல் 1.50 மணியளவில் ஜனாதிபதி நாடாளுமன்ற வளாகத்தில் இருந்து விடைபெற்றுச் சென்றார்.

## பேச்சுக் குறித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நேற்று மதியம் நாடாளுமன்றக் கன்ரீனில் எம்.ஏ.சுமந்திரன், சாள்ஸ் நிமலநாதன், சி.சிறீதரன், கலையரசன் ஆகிய நால்வரும் அமர்ந்திருந்து உணவருந்திக் கொண்டிருந்தனர்.

சற்றுத் தொலைவில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் டக்ளஸ் தேவானந்தா உட்பட சில அமைச்சர்களுடன் உணவருந்தி விட்டுப் பேசிக் கொண்டிருந்தனர்.

அந்தக் கூட்டத்தில் இருந்து முதலில் புறப்பட்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, கன்ரின் வாசலை ஒட்டி உணவருந்திக் கொண்டிருந்த சுமந்திரனை நோக்கிப் புன்னகைத்தார். சுமந்திரன் எழுந்து சென்று பிரதமருக்கு வணக்கம் தெரிவித்தமையோடு, அவருக்கு பிந்திய பிறந்த நாள் வாழ்த்தையும் தெரிவித்தார். அதை அன்புரிமையுடன் ஏற்றுக் கொண்ட பிரதமர் சுமந்திரனைத் நோக்கி "நாங்கள் மீளவும் பேச்சுக்களைத் தொடங்கவேண்டும்." – என்றார்.

"ஓம். நாங்கள் அதற்குத் தயார். நாங்கள் தயார் என்பதை வெளிப்படையாகக் கூறியும் விட்டோம். நீங்கள்தான் நேரம் ஒதுக்கி, அழைப்பு விடுக்க வேண்டும்." – என்று பதிலளித்தார் சுமந்திரன்.

"ஆமாம். நாம் பேசுவோம்." – என்று கூறிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அந்த இடத்துக்கு ஜனாதிபதி வரும் வரை சுமந்திரனோடு காத்து நின்றார்.

சாப்பாட்டு மேசையிலிருந்து, மற்றைய அமைச்சர்கள் புடை சூழ சில நிமிடங்கள் தாமதித்துப் புறப்பட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சுமந்திரனும், பிரதமரும் நின்ற இடத்தை நோக்கி வந்தார். சுமந்திரனை நலன் விசாரித்தார்.

ஜனாதிபதிக்கு வணக்கம் செலுத்திய சுமந்திரன் "நாங்கள் மீளவும் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்று பிரதமர் கூறுகின்றார்" – என ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

"ஆமாம். நாங்கள் பேச்சைத் தொடங்க வேண்டும்." – என்றார் பிரதமர்.

"ஏன் நான் தேர்தலுக்கு முன்னரே சுமந்திரனுடன் பல சுற்றுப் பேச்சுக்களை தொடங்கி விட்டேனே...!" – என்றார் ஜனாதிபதி.

"அது தேர்தலுக்கு முன்னரல்லவா? இப்போது தேர்தல் முடிந்து விட்டது. புதிய சூழல். எனவே நாம் பேச்சை புதிதாகத் தொடங்குவோம். தொடங்க வேண்டும்." – என்று குறுக்கிட்டுக் கூறினார் பிரதமர்.

ஆமாம் என்று தலையசைத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. பேச்சுக்கான நேரம், திகதி போன்றவற்றை ஒழுங்குபடுத்தி அறிவிப்பார் எனப் பிரதமரிடமும், சுமந்திரனிடமும் கூறிவிட்டு ஏனைய அமைச்சர்களுடன் அங்கிருந்து புறப்பட்டார். (உ)

## ஜெனீவாத் தொடரைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இது தொடர்பான தகவலை நீதியரசர் விக்னேஸ்வரனே வெளியிட்டார்.

நாடாளுமன்றத்தில் இருந்து வெளியே வந்த போது ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னைய வடமாகாண முதலமைச்சரும், தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும், தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் பின்வருமாறு பதிலளித்தார் – என்று தெரிவித்து தமிழ் மக்கள் கூட்டணியின் ஊடகப் பிரிவு தகவல் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதிலேயே இவ்விடயம் கூறப்பட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கேள்வி:- 2021 மார்ச் மாதம் வரவிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்சிலின் கூட்டத்தில் கலந்துகொள்வீர்களா? அதற்கான ஆயத்தங்கள் ஏதும் செய்துள்ளீர்களா?

பதில்:-தற்போதைய கொரோனா காலத்தில் திட்டமிடுவதும் அதனை நடைமுறைப்படுத்துவதும் சற்றுக் கடினமாகவே இருக்கின்றன. நான் கலந்துகொள்வது பற்றி பின்னர் அறிவிப்பேன். எனினும் நாங்கள் இது பற்றி தற்போது நினைத்திருப்பதைப் பற்றிக் கூறுகின்றேன்.

நாங்கள் விரைவில் ஒரு முக்கியமான ஆராய்வுக் குழுவை நியமிக்கப் பூர்வாங்க ஏற்பாடுகளில் இறங்கியுள்ளோம். குறித்த குழுவில் எம்மோடு சேர்ந்தவர்களை விட சட்டத்தரணிகள், பாதிக்கப்பட்டவர்களின் பிரதிநிதிகள், மனித உரிமை வல்லுனர்கள் போன்ற பலர் இடம்பெறுவார்கள். அக்குழு அங்கத்தவர்கள் குறித்த ஐக்கிய நாடுகள் கூட்டத்தில் கலந்துகொள்ள இருக்கும் நாடுகளின் பிரதிநிதிகளைத் தொடர்பு கொள்வார்கள். ஐக்கிய நாடுகள் அலுவலர்களைச் சந்திப்பார்கள். சர்வதேச நிறுவன அதிகாரிகளைச் சந்திப்பார்கள். சந்தித்து ஏன் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் முன் ஆஜர்ப்படுத்த வேண்டும் என்பது பற்றி அவர்களுக்கு எடுத்துரைப் பார்கள்.

அத்துடன் அவர்களுடன் சேர்ந்து ஒரு சர்வதேச விசாரணைப் பொறிமுறை பற்றி பேச வேண்டிய அவசியமும் எழுந்துள்ளது. அதாவது யுத்த குற்றச் சான்றுகளைச் சேகரித்து பாதுகாப்பாகச் சேமித்து வைத்தல், குற்றம் புரிந்த இலங்கையின் அரசியல் தலைவர்களையும், யுத்த கால படையணித் தலைவர்களையும் சர்வதேச நீதித்துறைப் பொறிமுறைகளுக்குள் எந்த வகையில் கொண்டு செல்வது பற்றியும் ஆராய வேண்டியுள்ளது. போகப் போக விவரங்களை நான் தருவேன். – என்று உள்ளது.

## தமிழ்த் தேசியக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கேள்விக்கு பதிலளிக் கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் –

புதிய கூட்டணி உருவாக்குவதற்கான திட்டவரைவுகளைச் சமர்ப்பித்திருக்கின்றோம். கடந்த காலங்களில் உருவாகிய கூட்டணிகளுக்குள் நிகழ்ந்த கடந்த காலத் தவறுகள் புதிய கூட்டணிக்குள்ளும் நிகழாத வகையில் அதனை அமைப்பதற்குக் கூடுதல் அக்கறை கொண்டு செயற்பட்டு வருகின்றோம்.

ஊடகங்களிலும் வெளியிடங்களிலும் ஐக்கியம் பற்றிப் பேசிக்கொள்கின்ற சில கட்சிகளின் சில நபர்கள், தங்கள் தனிப்பட்ட நலன்களுக்காகப் புதிய கூட்டணி உருவாகுவதை விரும்பவில்லை. இந்த விடயம் தொடர்பில் நேற்றுமுன்தினம் கூட்டுக் கட்சிகளுக்கு இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதும் பேசியுள்ளோம்.

அவ்வாறான சிக்கல்களைக் களைந்து, புதிய கூட்டணியை அமைப்பது தொடர்பிலான நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்

## டிப்பர் - ஓட்டோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
என்னும் உதய நகர், கிளிநொச்சியை சேர்ந்த சிறுமியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

பூநகரியில் இருந்து கிளிநொச்சி நோக்கி கடந்த 8 ஆம் திகதி ஓட்டோவில் பெற்றோருடன் பயணித்த சமயம் வீதியைக் கடப்பதற்கு தயாராக நின்ற டிப்பரின் பின் பகுதியில் ஓட்டோ மோதியுள்ளது. இதன்போது ஓட்டோவின் 'கரியர்' கம்பி வளைந்து முச்சக்கர வண்டியின் உள்ளே இருந்த சிறுமியின் தலையைத் தாக்கியுள்ளது.

உடனடியாக கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறுமி பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு சிகிச்சை பலனின்றி சிறுமி நேற்று முன்தினம் உயிரிழந்தார். இந்த மரணம் தொடர்பான விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் – பிறேம்குமார் மேற்கொண்டார்.

# வெளிநாடுகளில் சிக்கியுள்ள எம் உறவுகளை நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுங்கள்!

## வெளிவிவகார அமைச்சரிடம் சாணக்கியன் எம்.பி. கோரிக்கை

கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் மத்திய கிழக்கு நாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவதற்குரிய நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்க வேண்டும் என வெளிவிவகார அமைச்சரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவை நேற்றுச் சந்தித்துப் பேசியபோதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அத்துடன், இது தொடர்பான மகஜர் ஒன்றையும் இரா.சாணக்கியன் எம்.பி., வெளிவிவகார அமைச்சரிடம் கையளித்துள்ளார்.

சந்திப்பு தொடர்பில் சாணக்கியன் எம்.பி. தெரிவித்ததாவது:-



சர்வதேச நாடுகளை அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக தொழில் நிமிர்த்தம் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள இலங்கையர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பணியிடங்களுக்குச் செல்ல முடியாமலும், மூன்று வேளை உணவின்றியும் தாங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், இதன் காரணமாகத் தங்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறும் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள இலங்கையர்கள் என்னிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்நிலையிலேயே குறித்த விடயத்தை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவின் கவனத்துக்குக் கொண்டு வந்தேன். இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளேன். - என்றார்.

## தனிமைப்படுத்தப்பட்ட இடங்களில் சில பகுதிகள் விடுவிக்கப்படும்!

### இராணுவத் தளபதி கூறுகின்றார்



கொரோனா வைரஸ் பாதிப்பு அதிகம் உள்ள பகுதிகள் தவிர்ந்து தனிமைப்படுத்தப்பட்ட ஏனைய பிரதேசங்களை அடுத்த வாரமளவில் விடுவிப்பதற்கு அவதானம் செலுத்தப்பட்டு வருவதாக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த காலப்பகுதியில் விடுவிப்பதா இல்லையா என்பது தொடர்பிலான காரணிகளை ஆராய்ந்து வருவதாக அவர் சிங்கள ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தல் சட்டம் நாட்டில் எங்கும் அமுலாக்கப்படவில்லை என்றும் தற்போது கம்பஹாவில் 7 பொலிஸ் பிரிவுகளும் கொழும்பு மாவட்டத்தில் 17 பொலிஸ் பிரிவுகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசணைக்கு அமைவாக பொலிஸ் பிரிவு முழுவதும் தனிமைப்படுத்துவதா அல்லது அதன் சில பகுதிகளை மாத்திரம் தனிமைப்படுத்துவதா என்பது தொடர்பாக ஆராயப்படுகின்றன.

இதன்படி, மக்களுக்கு அச்சுறுத்தல் இல்லாத பகுதிகளை அடுத்த வாரத்தில் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

## சமூகத்தின் கருத்துக்களை எவராலும் நிறுத்த முடியாது

### அனில் ஜாசிங்க விளக்கம்



சுகாதார சேவைகள் முன்னாள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க, கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளிலிருந்து விலகியிருக்க ஏற்பட்டமைக்கான காரணம் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போது அவர் காரணம் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ளார்.

சுகாதார அமைச்சின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க, சுற்றாடல் அமைச்சுக்கு மாற்றப்பட்டமை தொடர்பில் சமூகத்தில் பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

இது தொடர்பில் நேற்றுத் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டார்.

சமூகத்தின் கருத்துக்களை என்னாலோ வேறு யாராலோ தடுத்து நிறுத்த முடியாது. அதுவே நாட்டின் ஜனநாயகத்தன்மை.

புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்டதன் பின்னர் ஜனாதிபதி, பதவி உயர்வாகவே புதிய பொறுப்பை வழங்கினார்.

இந்தப் பதவி தொடர்பில் எனக்கு விருப்பமில்லை எனக் கூறமுடியாது. எனக்கு வழங்கப்படும் பொறுப்பை நிறைவேற்ற நான் கட்டுப்பட்டிருக்கின்றேன் - என்றார்.

## கண்டி நிலநடுக்கம் பற்றி ஆராயக் குழு நியமனம்!

கண்டியின் சில பகுதிகளில் ஏற்பட்ட சிறியளவிலான நிலநடுக்கம் தொடர்பாக ஆய்வு செய்ய புவியியலாளர்கள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

கண்டியின் ஹாரகம, அனுரக, திகன ஆகிய பிரதேசங்களில் நேற்றுமுன்தினம் காலை 9.27 மணியளவில் நிலநடுக்கம் உணரப்பட்டது.

30 செக்கன்கள் வரை நீடித்த இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 2.25 ஆக பதிவாகியது என புவியியல் ஆய்வு பணியக அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

இதேவேளை, கண்டி, திகன பகுதியில் கடந்த செப்ரெம்பர் மாதமளவில் ஏற்கனவே இரண்டுக்கும் குறைவான சிறிய நடுக்கங்கள் பதிவாகியிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வவுனியாக் கிணற்றில் ஷெல்



வவுனியா தம்பனைச்சோலை பகுதியில் கிணற்றில் இருந்து வெடி பொருள்களை பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர்.

இந்தப் பகுதியில் உள்ள தனியார் காணியில் அமைந்துள்ள கிணற்றை நீண்ட நாள்களிற்கு பின்னர் அதன் உரிமையாளர் துப்புரவாக்கியுள்ளார்.

இதன்போது சேற்றில் புதைந்திருந்த நிலையில் ஆர். பீ.ஜி. ஷெல் ஒன்று இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா பொலிஸார் ஆர்.பீ.ஜி. ஷெல்லை மீட்டுள்ளனர். அந்தக் கிணற்றினுள் மேலும் வெடிபொருள்கள் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் நீதிமன்ற உத்தரவுடன் தேடுதல் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஈஸ்டர் தாக்குதல் ஆராயும் ஆணைக்குழு ஸ்கைப் வழியாக சாட்சியமளிக்கும் ரிஷாத்!

கொழும்பு, நவ.20

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பாக ஆராயும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் ஸ்கைப் வழியாக நேற்று (வியாழக்கிழமை) சாட்சியமளித்தார்.

ஆணைக்குழுவின் நடவடிக்கைகளின் தொடக்கத்தில் பதியுதீனுக்காக முன்னிலையான சட்டத்தரணி ருஷ்டி ஹபீப் தனது சாட்சியங்களை தமிழ் மொழியில் வழிநடத்துமாறு ரிஷாத் கோரினார் என ஆணைக்குழுவில் தெரிவித்தார்.


மொழிபெயர்ப்பாளர் நோய் காரணமாக கடமைக்கு சமுகமளிக்கவில்லை என்பதால் சிங்களம் அல்லது ஆங்கில மொழியில் சாட்சியங்களை வழங்குமாறு ஆணைக்குழு சாட்சிகளுக்கு அறிவுறுத்தியது.

தேவைப்படும்போது சில தமிழ் சொற்களைப் பயன்படுத்த அனுமதிக்க முடியும் என்று ஆணைக்குழுவின் தலைவர் கூறினார்.

எவ்வாறாயினும் தனது தாய்மொழியான தமிழில் சாட்சியமளிக்க ஜனநாயக உரிமை இருப்பதாகவும் சிங்களத்தில் சாட்சியங்களை வழங்கும்போது சில விடயங்களை சரியாக விளக்குவது கடினம் என்றும் ரிஷாத் கூறினார்.

அதன்படி மதிய உணவு இடைவேளையின் பின்னர் மொழிபெயர்ப்பாளர் ஒருவர் மூலம் தமிழில் சாட்சியங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு தமிழில் சாட்சியமளிக்கப்பட்டது.

### கந்தசஷ்டி சிறப்பம்சம்



**காத்திட வேலை ஏந்தி கந்தனாய் அமைந்த தெய்வம்!**

ஆதியாய் நடுவும் ஆகி
அளவிலாப் பொருளும் ஆகி
சோதியாய் நிற்கும் தெய்வம்
சுருதியாய் ஆன தெய்வம்
காதலாய் பரவி நின்றால்
கருணையை ஈயும் தெய்வம்
காத்திட வேலை ஏந்தி
கந்தனாய் அமைந்த தெய்வம்!

கலியுகம் போற்றும் தெய்வம்
காலனை விரட்டும் தெய்வம்
நிலையினை இழக்கா வண்ணம்
நிம்மதி நல்கும் தெய்வம்
ஒருதரம் நினைத்தால் போதும்
உயர்வினை அளிக்கும் தெய்வம்
அருவுரு ஆன தெய்வம்
அகிலத்தில் கந்தன் அன்றோ!

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மெல்பேண், ஆஸ்திரேலியா.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஐக்கியமாக எழுவதன் பலன்

*“ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு – நம்மில் ஒற்றுமை நீங்கி அனை வருக்கும் தாழ்வே”* – என்றான் மகாகவி பாரதி.

ஈழத் தமிழர் சமுதாயத்துக்கு இன்று வழிகாட்டும் அறநெறித் தத்துவம் இதுவாகத்தான் இருக்க முடியும்.

ஒற்றுமையின் வலிமையை கையோடு நாம் கண்டுணரும் வாய்ப்பு இப்போது கிட்டியிருக்கின்றது.

அதுவும் பகிரங்கமாக – நீதிமன்ற நடவடிக்கைகளை ஒட்டி – நமக்குத் தெளிவாகியிருக்கின்றது.

தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பான சட்ட விடயங்களைக் கையாள்வதற்கு தமிழர்கள் மத்தியில் கட்டுறுதியான – அமைப்பு ரீதியான – ஏற்பாடுகள் இருக்கவில்லை.

ஒரு காலத்தில் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடத் தொடங்கிய காலத்தில் – பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் போன்றவை அறிமுகப்படுத்தப்பட்ட எழுபதுகளின் பிற்பகுதியிலும் எண்பதுகளின் ஆரம்பத்திலும் – கொழும்பில் தமிழ் சட்டத்தரணிகள் ஒன்று திரண்டு, கட்டமைக்காத ஓர் அமைப்பாகச் செயற்பட்டனர். தமிழ் இளைஞர்களுக்கு எதிராகப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட பல வழக்குகளை அவர்களே தங்களுக்குள் பங்கீட்டுக் கையாண்டனர். இந்த இளைஞர்களுக்காகவும் வரன்முறையற்றுக் கைது செய்யப்பட்ட பிற தமிழர்களுக்காவும் நூற்றுக்கும் அதிகமான ஆள்கொணர்வு மனுக்களை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, வாதிட்டனர். கணினி பாவனைக்கு வராத அச்சமயத்தில் கொழும்பு ஹல்ஸ்டோர்ப்பில் தமிழ்ச் சட்டத்தரணிகள் ஒன்றிணைந்து ஆற்றிய பணி மகத்துவமாகப் பேசப்பட்டது. ஆனால் 83 ஜூலைக் கலவரம் அவற்றை எல்லாம் சின்னாபின்னமாக்கி, கால ஓட்டத்தையும், அரசியல் செல்நெறியையும் தலைகீழாக மாற்றியமைத்தது.

இப்போது மீளவும் சட்டத்துறையுடன், நீதிமன்றங்களோடு, ஒத்திசைந்து இயங்க வேண்டிய கட்டாயம் நமக்கு ஏற்பட்டிருக்கின்றது.

காணாமற்போனார் பிரச்சினையிலிருந்து காணி விடுவிப்பு வரை, அரசியல் கைதிகளின் விடுதலையிலிருந்து உயிரிழந்த எமது உறவுகளுக்கு நாம் நினைவேந்தல் செய்வது வரை, பல விடயங்களையும் செய்வதற்கும் சாதிப்பதற்கும் நீதிமன்றங்களின் கதவுகளைத் தட்ட வேண்டிய கட்டாயத்தில் தமிழினம் உள்ளது.

இந்த விடயங்களைச் செய்வதற்கு மட்டுமல்ல, இந்த விடயங்களில் இனம் ஏமாற்றப்படாமல், அடக்கப்படாமல் நிமிர்ந்தெழுவதற்கும் நமது ஐக்கியம் – ஒற்றுமை – அத்தியாவசியமாகின்றது.

இந்த அவசர – அவசிய – நிலைமையின் ஆழ, அகல, அர்த்த பரிமாணங்களைப் புரிந்து கொண்ட தமிழ் சட்டத்தரணிகள் தமிழர்களுக்கென *‘மக்களுக்கான நீதி’* என்ற கூட்டை ஒன்று சேர்ந்து அண்மையில்தான் – பத்து நாள்களுக்கு முன்னர்தான் – உருவாக்கினார்கள். கடந்த 9ஆம் திகதிதான் அந்த அமைப்பின் பூர்வாங்கக் கூட்டம் – அங்குரார்ப்பண சந்திப்பு – யாழில் நடைபெற்றது.

வடக்கு, கிழக்குக்கென இந்த அமைப்பு உருவாக்கப்பட்டதாயினும், வடக்கு மாகாணத்தில் வவுனியா மற்றும் மன்னார் பிரதேச சட்டத்தரணிகளின் பூரண பங்களிப்பு அன்றைய தினம் அக்கூட்டத்தில் கிடைக்கவில்லை.

எனினும், காலக்கிரமத்தில் அதையும் ஒழுங்குபடுத்தி விட முடியும் என்று நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது.

இப்படி வடக்கில் சட்டத்தரணிகள் மக்களுக்காக ஒன்றிணைந்தமையின் பலனையும், அதனை உடனடியாக மன்னார், வவுனியாவில் நிலைநிறுத்தாமையின் – தாமதத்தின் – விளைவையும், குறுகிய காலத்திலேயே நாம் பட்டுணர முடிந்திருக்கின்றது.

நவம்பர் 27ஆம் திகதி, யுத்தத்தில் உயிரிழந்த தமது உறவுகளுக்கு தமிழ் மக்கள் நினைவேந்தல் செய்வதை, சட்டத்தைக் காட்டியும், பொது அமைதியைச் சுட்டியும் தடுத்து வருகின்றது பௌத்த, சிங்கள ஆட்சிப் பீடம்.

இத்தகைய சட்ட விரோத தடைகளைச் சவாலுக்கு உட்படுத்துவதும் *‘மக்களுக்கான நீதி’* என்ற சட்டத்தரணிகளின் கூட்டின் பிரதான இலக்குகளில் ஒன்றாகும். அந்த வகையில், அரசின் மேற்படி உத்தேச தடை விதிப்புத் திட்டத்தை சவாலுக்கு உட்படுத்தி, வடக்கு மாகாண மேல் நீதிமன்றத்தில் பல வழக்குகளை *‘மக்களுக்கான நீதி’* அமைப்பு தாக்கல் செய்திருக்கின்றது. அந்த வழக்குகள் இன்று நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றன.

அதற்கிடையில், நேற்று பயங்கரவாதத் தடைச்சட்டத்தையும், கொரோனாத் தொற்று தடுப்பு விதிகளையும் காட்டி கீழ்நிலை நீதிமன்றங்கள் மூலம் நினைவேந்தலுக்குத் தடை விதிக்கும் உத்தரவுகளைப் பெற்றுக் கெள்ள பொலிஸ் தரப்பு முயற்சி எடுத்தது.

அதை எதிர்பார்த்திருந்த மக்களுக்கான நீதி அமைப்பின் சட்டத்தரணிகள் மேல் நீதிமன்றத்தில் விடயம் இருப்பதால், அத்தகைய தடை உத்தரவுகளை மல்லாம், பருத்தித்துறை மற்றும் யாழ்ப்பாணம், சாவகச்சேரி நீதிவான் மன்றங்கள் வழங்காமல் பார்த்துக் கொண்டனர்.

ஆனால் மக்களுக்கான நீதி அமைப்பின் நடவடிக்கைகள் வவுனியா, மன்னாருக்கு சரியாக இன்னும் விஸ்தரிக்கப்படாமையால் அங்கு தடை உத்தரவுகளைப் பெற்றுக் கொண்டது பொலிஸ்.

ஐக்கியமாக – கூட்டமைப்பாக – நாம் செயற்படுவதன் பலனையும், செயற்படத் தவறினால் ஏற்படக் கூடிய பிரதியனுகூலத்தையும் இந்த விடயம் நமக்கு உணர்த்தி நிற்கின்றது.

# வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கே அரசு அதிக கடனைப் பெற்றதாம்!

## தமிழர்கள் மீது பழியைப் போடுகிறார் பந்துல



வடக்கு கிழக்கு பிரதேசங்களின் அபிவிருத்திக்காகவே அதிகளவில் சர்வதேச கடன்களை வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டதாக வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அத்துடன், கடன் நெருக்கடியில் சிக்கிக் கொண்டுள்ள போதிலும் அவற்றில் இருந்து விடுபடும் மாற்று வேலைத்திட்டம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசிடம் இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான முதலாம் நாள் விவாதத்தில் கடந்த (புதன்கிழமை) உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது, கடந்த 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டுவரை நாட்டில் எந்தவொரு பொருளாதார வளர்ச்சியும் ஏற்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தமக்கு நாட்டை ஒப்படைக்கும் போது, மிக மோசமான நாடாகவே காணப்பட்டது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியில் மிகப்பெரிய இரண்டு சவால்களை எதிர்கொள்ள நேர்ந்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

ஒன்று ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் நாடு கண்ட பொருளாதார வீழ்ச்சி எனவும் மற்றையது கொரோனா வைரஸ் தொற்று தாக்கம் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இந்த இரண்டும் நாட்டின் பொருளாதாரத்தில் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ள போதும் தாம் கடன்களைச் செலுத்தும் வேலைத் திட்டங்களை முன்னெடுத்தே வருகின்றோம் என பந்துல குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

# நிதி மோசடிகளை அங்கீகரிக்கும் அரசின் வரவு - செலவுத் திட்டம்!

## முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர கருத்து



வெளிநாடுகளில் பதுக்கிவைக்கப்பட்டுள்ள நிதியை எமது நாட்டில் முதலீடு செய்வதற்கு அனுமதியளிப்பதன் ஊடாக 2021 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் நிதிமோசடியை உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கிறது என்று முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

2021 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் பிரதமரும் நிதியமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷவால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதில் உள்ளடக்கப்பட்டிருந்த வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பான கொள்கையை விமர்சித்து மங்கள சமரவீர தனது டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவொன்றிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்.

அதில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

எவ்வித கேள்விகளுமின்றி வெளிநாடுகளில் பதுக்கிவைக்கப்பட்டுள்ள நிதியை எமது நாட்டில் முதலீடு செய்வதற்கு அழைப்பு விடுப்பதன் ஊடாக 2021 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் நிதிமோசடியை உத்தியோகபூர்வமாக மன்னிக்கிறது.

இதனூடாக நிதிச்செயற்பாட்டு செயலணியின் பணமோசடி கண்காணிப்புப்பிரிவின் சாம்பல் பட்டியலுக்குள் மீண்டும் நாம் உள்வாங்கப்படப்போகிறோமா? ஏற்கனவே அதிலிருந்து வெளியேறுவதற்கு நிதியமைச்சால் பல ஆண்டுகள் கடுமையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்.

# அரசின் வரவு - செலவுத் திட்டத்தில் மக்களின் பிரச்சினைக்கு தீர்வில்லை!

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி



அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு – செலவுத் திட்டத்தில் மக்கள் அனுபவித்துவரும் பிரச்சினைகளுக்கோ அல்லது நாட்டின் பொருளாதாரம் முகங் கொடுத்துக்கொண்டிருக்கும் நெருக்கடிக்கோ எவ்வித தீர்வுகளும் முன்வைக்கப்படவில்லை.

மாறாக தமது பிரச்சினைகளுக்கான தீர்வுகளை மக்கள் தாமகவே தேடிக்கொள்ள வேண்டும் என்பதையும் அரசாங்கம் எதிர்நோக்கியிருக்கும் நெருக்கடிகள் என்னவென்பதையுமே இது வெளிப்படுத்தியிருக்கிறது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைக்காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை - 2020
‘உலகில் உள்ள கானகங்களுக்கு நாம் இழைத்திடும் கொடும் செயல்கள் நாம் நமக்குள் ஒருவருக்கொருவர் இழைத்திடும் கொடும் செயல்களின் பிரதிபலிப்பே.’
- மகாத்மா காந்தி (இந்திய தேசபிதா)

# தமிழரின் காணிகளை அபகரித்து புத்த பகவானுக்கு கோயில்கட்டி சிறுபான்மைத் தேசிய இனங்களின் மனங்களைப் புண்ணாக்காதீர்!

## சுரேஷ் பிறேமச்சந்திரன் கோரிக்கை



தமிழ் பேசும் மக்களின் நிரந்தர வாழிடங்களான வடக்கையும் கிழக்கையும் நிரந்தரமாகப் பிரிக்கும் நோக்கில் திருகோணமலை மாவட்டத்தின் எல்லையில் குச்சவெளிப் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள – தமிழ்ப் பேசும் மக்களுக்குச் சொந்தமான – காணிகளையும் பொதுக்காணிகளையும் அபகரித்துப் பௌத்த கோயில்களை அமைக்கும் பணியையும் –

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைப்புற கிராமங்களில் உள்ள காணிகளை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் அபகரித்து மேற்கொள்ள முயற்சிக்கும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களையும் –

கைவிட்டு சிறுபான்மை தேசிய இனங்களின் மகிழ்ச்சிக்கு வித்திடுமாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இணைப் பேச்சாளருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவரது கோரிக்கையின் முழு விவரம் வருமாறு:–

இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவியின் ஒரு வருட நிறைவு விழாவில் தான் சிங்கள மக்களால் தெரிவு செய்யப்பட்டவராகவும் சிங்கள மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றி வருபவராகவும் கூறியுள்ளார். கடந்த ஒருவருட சாதனைகளை அவர் பட்டியலிடும் பொழுது, முதலாவதாக கிழக்கிலங்கையில் சிங்கள பௌத்த புராதனச் சின்னங்களை அடையாளமி டுவதற்கான ஆணைக்குழுவை நான் நியமித்துள்ளேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதன் தொடர்ச்சியாக மட்டக்களப்பு மாவட்டத்தின் மேய்ச்சல் தரையை கபளீகரம் செய்து, அதனை சிங்கள விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிப்பதற்கான முயற்சிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதேபோல, வடக்கு – கிழக்கின் முக்கியமான பல பகுதிகளை முழுமையாக கபளீகரம் செய்து, அங்கும் சிங்கள மக்களைக் குடியேற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவின் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, நாயாறு போன்ற பகுதிகளை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையானது இந்தப் பிரதேசத்தின் நிர்வாகத்தைக் கையேற்பதன் மூலம் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபருக்கோ அல்லது பிரதேச செயலருக்கோ எத்தகைய நிர்வாக அதிகாரமும் இல்லாமல் செய்யப்படுகின்றது. அதனை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை கையேற்பதன் ஊடாக அதனை முழுமையான சிங்களக் குடியேற்றத்திற்கு உட்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தற்காலிகமாக தடை செய்யப்பட்டிருப்பினும் கூட, அடுத்த கட்டங்களில் என்ன நடக்குமென்று கூறமுடியாது. இதனைப் போன்றே,திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் ஏறத்தாழ ஒன்பது காணித்துண்டுகள் அடையாளம் காணப்பட்டு பௌத்த கோயில்கள் கட்டுவதற்காக அடையாளமிடப்பட்டு வர்த்தமானியில்

பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தென்னமரவாடி கிராமத்தில் 20.2343 ஹெக்டெயர் நிலப்பரப்பும், அதே பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட புல்மோட்டையில் மூன்று வெவ்வேறு இடங்களில் 11ஹெக்டெயர், 7 ஹெக்டெயர், 1 ஹெக்டெயர் நிலப்பரப்பு காணிகளும், குச்சவெளி, திரியாய் கிராமத்தில் 20 ஹெக்டெயர் நிலப்பரப்பும், குச்சவெளி கும்புறுபிட்டி, கிழக்கு சலப்பையாறு கிராமத்தில் 20 ஹெக்டெயர் நிலப்பரப்பும், குச்சவெளி,புல்மோட்டை பிரதேசத்தில் 6ஹெக்டெயர் நிலப்பரப்பும், குச்சவெளி, புல்மோட்டை ஒரு நிலப்பரப்பில் 13 ஹெக்டெயரும், அதே பிரதேசத்தில் மற்றொரு பகுதியில் 19 ஹெக்டெயர் நிலப்பரப்பும் பௌத்த கோயில்கள் கட்டுவதற்காக அரசாங்கம் ஒப்புதலளித்து வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைப்புற கிராமங்களும், திருகோணமலை மாவட்டத்திற்குட்பட்ட குச்சவெளி பிரதேச எல்லைப்புற கிராமங்களும், சிங்களமயமாக்கப்படுவதற்கான அடிப்படையிலேயே புத்த கோயில் களுக்கான காணிகளை, கையகப்படுத்துவதும் முல்லைத்தீவில் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் காணிகளை அபகரிப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழ்ப் பேசும் மக்கள் செறிந்துவாழும் குச்சவெளி போன்ற ஒரே பிரதேச செயலகப்பிரிவில் ஒன்பதுக்கும் மேற்பட்ட பௌத்த கோயில்களைக் கட்டுவதற்காக நூற்றுக்கணக்கான ஏக்கர் காணிகளைக் கையகப்படுத்துவதன் நோக்கம் என்ன? சிங்கள மக்களே இல்லாத இத்தகைய பிரதேசத்தில் மிக நெருக்கமான முறையில் பௌத்த கோயில்களைக் கட்டுவதற்கு முயற்சிப்பதும், இதனை ஏற்றுக்கொண்டு அரசாங்கம் காணிகளை வழங்க முன்வருவதும், மிகப் பாரிய அளவிலான சிங்கள, பௌத்த விஸ்தரிப்பினை ஏற்படுத்துவதற்கான முயற்சியாகும். இது அந்தப் பிரதேசங்களில் பெரும்பான்மையாக வாழும் சிறு பான்மை தேசிய இனங்களை சிறுபான்மையாக்கும் முன்னெடுப்பாகும்.

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து கிழக்கு மாகாணத்தின் அம்பாறை, திருகோணமலை போன்ற எல்லைப்புற பிரதேசங்களிலும் வடக்கில் வவுனியா, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களின் எல்லைப்புற பிரதேசங்களிலும் அங்கு வசித்து வந்த தமிழ் மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு, பல்லாயிரக்கணக்கான சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டு வந்திருக்கின்றனர். இதனால் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களும் தமிழ் மக்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன. வடக்கிலும் கிழக்கிலும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் கடந்த எழுபது வருடங்களாக முற்றுப்பெறாத நிலையில், இந்தப் புதிய அரசாங்கமானது பௌத்த கோயில்கள் கட்டுவது, பௌத்த புராதன சின்னங்களைப் பராமரிப்பது, மகாவலி அபிவிருத்தி அதிகார சபையினூடாக காணிகளை நிர்வாகம் செய்வது போன்ற பல திட்டங்களின் கீழ் தமிழ் மக்களின் காணிகளைத் தொடர்ந்து கபளீகரம் செய்த. வருவதையே மேற்கண்ட நடவடிக்கைகள் தெளிவுபடுத்தி நிற்கின்றன.

இலங்கை அரசாங்கங்களின் இத்தகைய நடவடிக்கையானது தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடங்களான வடக்கு – கிழக்கின் நிலத்தொடர்ச்சியை இல்லாமல் செய்து, வடக்கையும் கிழக்கையும் நிரந்தரமாக இரண்டு பகுதிகளாக மாற்றுவதற்கான முயற்சியே ஆகும். இதனூடாக தமிழ் மக்களின் இருப்பும் அடையாளமும் கேள்விக்குள்ளாக்கப்படுகின்றன.

நீதிமன்றங்களினூடாக பெற்றுக்கொள்ளப்படும் தற்காலிகத் தடை உத்தரவுகள் என்பது இவற்றுக்கான நிரந்தரத் தீர்வாக அமையாது. வடக்கு – கிழக்கிலிருந்து தெரிவு செய்யப்பட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவை தொடர்பாகக் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொண்டு அரசாங்கத்தின் இத்தகைய கபடத்தனமான சூழ்ச்சிகளை முறியடித்து, தமிழ் மக்களின் பாரம்பரிய நிலங்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும்.– என்று உள்ளது.

## அழிவடையும் சிறுவர் நலம் ஆண்டவனே பாராயோ!

வளரும் தளிர்கள் வாடி வதங்குவதா
இளமை உடைந்தால் நிலைமை சிதைவடையும்
எழுமின் எனவழைக்கும் இளமை தனைவதைத்தல்
முழுமை வாழ்வினுக்கும் முடங்க லெனவமையும்

வறுமை ஒரு பக்கம் வாட்டும் போரொருபக்கம்
அடிமை ஒரு பக்கம் அனாதை நிலையோர்பக்கம்
உலகெங்கும் இளந்தளிர்கள் வாடி வதங்குகிறார்
கூட்டமிட்டுப் பேசிடினும் குறைமட்டும் அகலவில்லை

அரக்கரென இருக்கின்றார் அதிகலாபம் தனைக்கருதி
அரைகுறையில் பணியமர்த்த ஆள்பிடிக்க அலைகின்றார்
கலியாணத் தரகர்போல் பலருலவி நாட்டினிலே
கருகிவிடச் செய்கின்றார் சிறுவர்களைக் காசாக்க

போதைவஸ்து வியாபாரம் காசளிக்கும் பொக்கிஷமே
ஆசாட பூபதியாய் அதில்பலரும் திகழுகிறார்
அவர்பொருளை விற்பதற்கு இளசுகளைப் பலியாக்கி
பிஞ்சினிலே நஞ்சுதனை ஊட்டுகிறார் நாட்டினிலே

மாடிமனை வாகனங்கள் வசதியொடு வாழ்ந்திடுவார்
ஏழ்மைதனை மனமிருத்தி இளசுகளைச் சிதைக்கின்றார்
வீட்டுவேலை தோட்டவேலை வெளிவேலை பலவேலை
அத்தனையும் செய்வதற்கு அடிமையாய் ஆக்குகிறார்

படிக்கின்ற வயதினிலே பலவேலை பார்ப்பதற்கு
பிடித்துமே போகின்றார் பிய்த்துமே வீசுகிறார்
ஆட்சியிலும் மாற்றமில்லை காட்சியிலும் மாற்றமில்லை
அழிவடையும் சிறுவர்நலம் ஆண்டவனே பாராயோ

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மெல்பேண், ஆஸ்திரேலியா.

(இன்று சர்வதேச சிறுவர் தினம்)

## பச்சை மீனைக் கடித்துக் காட்டிய செயல் தவறான நடவடிக்கையாம்



சமைக்காமல் பச்சை மீனை உட்கொள்வது நல்லது என்று கூறி சிலர் தவறான செய்தியை பரப்புகிறார்கள் என அரசு வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் வைத்தியர் ஹரித்த அலுத்கே இதனைத் தெரிவித்துள்ளார்.

நன்கு சமைத்த மீன்களை உட்கொள்வதன் மூலம் கொரோனா தொற்று பரவாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மீன்களின் தோலில் உள்ள பற்றீரியா மற்றும் நுண்ணுயிரிகள் செரி மான அமைப்பைக் கடுமையாகச் சேதப்படுத்தும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மீன்உட்கொள்ளவேண்டுமானால் மீன்களைக் கழுவி, சுத்தம் செய்து, சமைத்து உண்ணுமாறும் அவர் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை, கொரோனாத் தொற்று அச்சத்தால் மீனை வாங்குவதற்கு மக்கள் அச்சம் கொண்டுள்ள நிலையில், முன்னாள் மீன் வளத்துறை அமைச்சர் திலிப் வெதஆரச்சி மக்கள் மீன் சாப்பிட வேண்டும் என அண்மையில் வலியுறுத்தினார்.

ஊடகசந்திப்பில்கலந்து கொண்டிருந்த அவர், மீனவர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என குறிப்பிட்டதுடன் ஊடகவியலாளர்கள் முன்னிலையில் பச்சை மீனை உட்கொண்டு காண்பித்திருந்தார்.

இவ்வாறான நிலையிலேயே அரசு வைத்திய அதிகாரிகள் சங்கம் நன்கு சமைத்த மீன்களை உட்கொள்வதன் மூலம் கொரோனா தொற்று பரவாது தெரிவித்துள்ளது.

## லலித் வீரதுங்க, அனுஷ பெல்பிட்ட ஆகியோர் நேற்று விடுதலை!

முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் தொலைத் தொடர்புகளை ஒழுங்குப்படுத்தும் ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் அனுஷ பெல்பிட்ட ஆகியோரை சில் துணி வழக்கில் இருந்து விடுதலை செய்து மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (வியாழக்கிழமை) உத்தரவிட்டுள்ளது.

இதனடிப்படையில், இதற்கு முன்னர் கொழும்பு மேல் நீதிமன்றம் இவர்களைக் குற்றவாளிகளாக அறிவித்து வழங்கிய தீர்ப்பு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நேரத்தில் இலங்கை தொலைத் தொடர்புகளை ஒழுங்குப்படுத்தும் ஆணைக் குழுவுக்குச் சொந்தமான 60 கோடி ரூபா பணத்தை தவறாகப் பயன்படுத்தினர் எனக் குற்றம் சுமத்தி, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் லலித் வீரதுங்க மற்றும் அனுஷ பெல்பிட்ட ஆகியோருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

வழக்கை விசாரித்த மேல் நீதிமன்றம் இவர்களுக்கு சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. இவர்கள் இதற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்தனர்.

இந்த மனு விசாரணைக்கு எடுக்கப்பட்ட பின்னர், இவரும் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். இந்த நிலையில் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் குமுதினி விக்ரமசிங்க மற்றும் தேவிகா அபேரத்ன ஆகியோர் அடங்கிய ஆயம் மனு மீதான விசாரணைகளை நடத்தியதுடன் நேற்று தீர்ப்பை வழங்கியுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# சிறுவர் உரிமைகள் மீதான 30 ஆண்டு கால மீள்வாசிப்பு




**ஜெகநாதன் தற்பரன் (சட்டமுதுமாணி), சட்டத்தரணி, அமைப்பாளர் - சமூக நியாயத்திற்கானதும் சிறுவர் உரிமைகளுக்குமான சட்டத்தரணிகளின் அமைப்பு (ஆசியப் பிராந்தியம்)**

அனைத்துலக பொது ஆவணமாக சிறுவர் உரிமைகள் சமவாயம் 30 ஆண்டுகளுக்கு முன்னர் நவம்பர் 20, 1989 நாளில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையினால் வெளியிடப்பட்டது. மொத்தம் 54 உறுப்புரைகளினை ஆகக் குறைந்தளவு தராதரமாக கொண்டுள்ள இவ் ஆவணம் 41 உறுப்புரைகளினை சிறுவர்களுக்கான உரிமைகளாக வரையறை செய்தது. சமவாயத்திற்கு மேலதிகமாக இரு வேறு இணைப்புக்களினையும் ஐக்கிய நாடுகள் பொதுச்சபை ஏற்றுக்கொண்டிருந்தது.

ஆயுத மோதல்களினால் பாதிப்புறும் மற்றும் விற்பனை, கடத்தல் தொடர்பான நிலைவரங்களில் சிறுவர்களின் நிலைமைகளினை கவனிப்பு செய்வதற்கென்றே அவ்விரு மேலதிக இணைப்புக்களினையும் ஐக்கிய நாடுகள் பொதுச்சபை ஏற்றுக்கொண்டிருந்தது.

இலங்கை உட்பட்ட பல நாடுகளில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் இத்தகைய ஏற்பினால் உண்டான விளைவுகள் பல. நாடுகளின் மீதான சர்வதேசத்தின் அழுத்தம் குறித்து அரசு உட்பட பல்வேறு அமைப்புக்கள் அவதானிப்பு செய்ததுடன், செய்யப்பட வேண்டிய பங்கும் செயற்பாடுகள் குறித்தும் இப்பத்தி ஆராய்கின்றது.

**இலங்கை நிலைவரம்:**

சிறுவர் உரிமைகள் சமவாயம் மற்றும் அவற்றின் இணை விரிவாக்க ஆவணங்கள் அதிக எண்ணிக்கை (119) நாடுகளினால் ஏககாலத்தில் ஒருமித்து ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைக்கு வந்தது. 02ஆம் திகதி புரட்டாதி மாதம் 1990 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் இச் சமவாயம் நடைமுறைக்கு வந்தது. இதன் மூலம் தேசிய அரசு சிறுவர் உரிமைகளினை செயற்படுத்த, நடைமுறைப்படுத்த, கண்காணிப்பு மற்றும் அமுலாக்கம் செய்து அறிக்கைகளிட எதிர்பார்க்கப்பட்டன. இலங்கை அரசாங்கம் உட்பட பல்வேறு அமைப்புக்கள் சர்வதேச ஒப்பந்தக் கடப்பாடுகளின் மீது விதிவிலக்கின்றி அதிக கரிசனம் கொள்வதற்கு சர்வதேசத்தினால் அழுத்தம் கொடுக்கப்பட்டு இருந்தன. கடந்த காலங்களில் இலங்கை அரசினால் பல்வேறு முன்னேற்றகரமான நடபடிமுறைமைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அவற்றில் முக்கியமானவை வருமாறு:-



அனைத்துலக சிறுவர் உரிமைகள் சமவாயத்தினை அடிப்படை எண்ணக்கருவாகக் கொண்டு இலங்கை சிறுவர் பட்டயம் இலங்கை நாடாளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் (1991இல்) தமிழ் மற்றும் சிங்கள மொழி பெயர்ப்புக்களும் வெளியிடப்பட்டிருந்தன.

தேசிய, மாகாண, மாவட்ட, பிரதேச மற்றும் கிராமிய மட்டங்களில் சிறுவர் உரிமைகளினை யதார்த்தமாக்கமடையச் செய்யவும், கண்காணிப்பு செய்து அறிக்கையிடவும் கட்டமைப்புக்கள் சுற்றறிக்கைகள் மூலம் ஏற்படுத்தப்பட்டன. போர்க் காலங்களிலும் இத்தகைய குழுக்களின் செயற்பாடுகள் வடக்கு கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் செயற்படுத்தப்பட்டிருந்தன. சிறுவர் நலன் சார்பாக தேசிய திட்டங்கள் வகுக்கப்பட்டிருந்தன.

தமது நலன் சார் விடயப்பரப்புக்களில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் போது சிறுவர்களது கருத்துக்கள் செவிசாய்க்கப்படும் நோக்கில் சிறுவர் பங்களிப்பு என்பதுவும் கட்டாயமாக்கப்பட்டிருந்தன.

தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் ஆயுத குழுக்களுடன் இணைந்து ஆயுத மோதல்களினால் பாதிப்புறும் சிறுவர்களுக்கு விசேட திட்டங்கள் முன்மொழியப்பட்டிருந்தன.

போரின் போதும் சிறுவர்கள் பாதுகாக்கப்படுதலினை உறுதிப்படுத்துவதற்காக சமாதான வலயங்கள், பாதுகாப்பு நிலையங்கள் இனங்காணப்பட்டு, நேரடியான தாக்குதல்களிலிருந்து சிறுவர்களின் உயிராபத்துக்கள் கணிசமான அளவு தவிர்க்கப்பட்டிருந்தன.

சாசனம் சார்ந்து மேற்படியான விடயங்கள் உள்ளடங்கலாக அரச தரப்பினர் தமது முன்னேற்ற அறிக்கையினை (இன்றை வரையில்) மூன்று தடவைகள், ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் கீழ் செயற்படும் சிறுவர் உரிமைகள் கண்காணிப்புக் குழுவிற்கு அனுப்பி வைத்திருந்தன. இவ்வாறாக கடந்த காலங்களில் அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களினால் ஐக்கிய ஐக்கிய நாடுகள் அமைப்புக்கு அனுப்பி வைத்திருந்த அறிக்கைகளின் சுருக்கமான விபரம் வருமாறு:-



மேற்படி தரவுகளின் முலம் இலங்கை அரசானது அறிக்கைகளினை காலக்கிரமத்தில் அனுப்பி வைப்பதில் சங்கடங்களினை எதிர்கொள்வது புலனாகின்றது. அரச தரப்பு அறிக்கைகளில் சிறுவர்களின் நிலைவரங்கள் விவரமாக இணைக்கப்படாத காரணத்தினாலும் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றகரமான விடயப்பரப்புக்களினைத் தெளிவுபடுத்துவதற்காகவும், ஐக்கிய நாடுகள் சபையின் பல்வேறு தரப்புக்களிலிருந்து விமர்சனங்கள் காலத்துக்குக் காலம் வெளிக்கிளம்பின. அத்துடன், ஒலரா ஒட்டுண்ணு, கேணல் பற்றிக் போன்ற விசேட பிரதிநிதிகளும், யுனிசெவ் அமைப்பின் தலைவர்களும் வருகை தந்து வடக்கு, கிழக்கு சிறுவர்களின் நிலைப்பாட்டினை அறிந்து வைத்திருந்தனர்.

ஏக காலத்தில், இலங்கை சார்ந்த இரு பிரதிநிதிகள் டாக்டர்.ஜெயாந்தி வியஜமானெ மற்றும் ராதிகா குமாரசுவாமி உலகலாவிய ரீதியில் சிறுவர் உரிமைகள் தொடர்பில் பிரபல்யமடைந்திருந்தனர். இவர்கள் ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் சம்பந்தமாக நேரடியாக இணைந்து செயற்பட்டு வந்த பொழுதிலும் சர்வதேசம் பல்வேறு மார்க்கங்களில் நிலைமைகளினை உன்னிப்பாக அவதானித்து, அரசிற்கு வேண்டிய ஆலோசனைகளினை வழங்கியிருந்தது. இவ்வாறாக, இலங்கை அரசானது கடந்த கால் நூற்றாண்டுகளில் பல்வேறு வழிகளில் அழுத்தங்களுக்கு ஆளாகியிருந்தது. இவ்வாறாக சிறுவர் உரிமைகள் என்பது சிறுமைப்படுத்தப்பட்டிருந்தது.

இத்தகைய சர்வதேச சவால்களினை முறியடிக்கும் நோக்கில், இலங்கை அரசு சர்வதேச குடியியல் மற்றும் அரசியல் சாசனத்தினையும், தனிநபர் முறைப்பாட்டினையும் உள்ளூர்ச் சட்டங்களில் உள்வாங்கியிருந்தது. அத்துடன் பெண்களுக்கு எதிரான வன்முறைகளினையும், விசேட திறனுடையவர்களின் உரிமைகளினை உள்ளூரில் சாத்தியமாக்கியது. சித்திரவதை மற்றும் துன்புறுத்தப்படுதல் என்பனவற்றிலிருந்து பொது மக்கள் பாதுகாக்கப்படுதல் என்பதனையும் நடைமுறைக்கு கொண்டு வந்து சர்வதேசத்தின் நன்மதிப்பினை இலங்கை அரசு பெற முயன்றது.

**இலங்கை அரசின் முக்கிய நகர்வுகள்**

இருந்த பொழுதிலும், சர்வதேச நகர்வுகளுக்கு அமைவாக மாறி வந்த இலங்கை அரசாங்கங்கள் கடந்த 30 ஆண்டுகளின் பாரிய இராஜதந்திர நகர்வுகளினையும் சிரமங்களிற்கு மத்தியில் சர்வதேசத்தின் நன்மதிப்பினை பெற்றுக் கொள்ளத் தவறவில்லை. அவற்றில் மிக முக்கியமானவை வருமாறு:-

இலங்கை அரசானது தனது முதலாவது முன்னேற்ற அறிக்கையினை 1994இல் ஐ.நாவிற்கு அனுப்பி வைத்திருந்தது. எனினும், இவ்வறிக்கையில், அக்காலப்பகுதியில் இடம்பெற்ற உள்ளூர் இடம்பெயர்வு, வடக்கு சிறார் தொடர்பில் போதிய தரவுகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இதனை வன்மையாக ஐ.நா. கண்டித்திருந்தது. இதே வேளை, நிலைமைகள் பூதகாரமாக மாறாது தடுத்துவிட யுனிசெவ் அமைப்புடன் இணைந்து சிறுவர் உரிமைகள் சமவாயத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு நாள் கொண்டாட்டங்களினை 1999இல் திருகோணமலையில் மக்கெய்ஸர் மைதானத்தில் வெகு விமர்சையாக அரசு கொண்டாடியிருந்தது. யாழ் மாவட்டம் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த காரணத்திலால் இராணுவ விமானம் மூலம் அனுராதபுரம் வந்திறங்கிய 25 சிறுவர்களும் இவ்விழாவில் இணைக்கப்பட்டனர். இவ்விமான நகர்வு தாக்கப்படாதிருக்க அமைப்புக்கள் அறிவுறுத்தப்பட்டிருந்தன.

வன்னிப்பகுதி விடுதலைப்புலிகளின் பூரண கட்டுப்பாட்டினுள் இருந்ததனால் முயற்சிகள் பல மேற்கொள்ளப்பட்டும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட சிறுவர் இந்த நிகழ்வில் பங்கு பற்றியிருக்கவில்லை. ஆயுத மோதல்களினால் பாதிப்புறும் சிறுவர்களின் நிலைமைகள் குறித்த அவதானிப்புக்கள் நிகழ்ச்சி நிரலில் இணைக்கப்படாமை பங்கு பற்றாமைக்கான முக்கிய காரணமாக விடுதலைப்புலிகளினால் முன்வைக்கப்பட்டிருந்தது. நிகழ்வுகளினை அவதானித்திருந்த யுனிசெவ் அமைப்பின் பிரதிநிதி இறுதி நாள் நிகழ்விற்கு வந்திருந்த சிறுவர்களினை நோக்கி 25 மாவட்டங்களின் பெயர்களினைக் கூறி மாவட்ட ரீதியில் கைகளினை உயர்த்தக்கூறிய போது குறிப்பிட்ட மாவட்டங்கள் புறக்கணிப்பு செய்திருந்தமை புலனானது, உறுதிப்படுத்தப்பட்டதானது, வரல்லாற்றில் பதிவானது.

இதே வேளை, இக்கட்டான நிலைமையிலும் யாழிலிருந்து வந்திருந்த சிறுவர்கள், அரச சார்பற்ற நிறுவனப்பிரதிநிதிகள் மூலம் வழிப்படுத்தப்பட்டதுடன், 25 சிறுவர்களும், வன்னிப்பகுதி சிறார் நிலவரத்தினையும் சிறப்புற 18 இடங்களில் 15 நாள்களில் ஆற்றுகைகளாக வெளிப்படுத்தியிருந்தனர். இராணுவ இணைவு என்பதுவும் சிறார் பயணத்திற்கு மட்டுமாக என மட்டுப்படுத்தப்பட்டது. இவ்வாறான நிலைமைகள் ஒலரா ஒட்டுண்ணுவின் வருகையினை சாத்தியமாக்கியதுடன் அரசிற்கும் வடக்கு மற்றும் கிழக்கு சிறுவர் தொடர்பில் அழுத்தத்தினைக் கொடுப்பதற்கு ஏதுநிலையாக்கியது.

ஆயுத மோதல்களில் ஈடுபட்ட குழுக்களுக்குள் முரண்நிலை ஏற்பட, ஆயுத போராட்டங்களில் இணைந்து பின்பு சமூகவயப்படலுக்கு இணங்கிய சிறுவர்களுக்கான உதவிகளினைச் செய்வதற்கு சர்வதேச அமைப்புக்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் காத்திரமான பங்களிப்பினை வழங்கியிருந்தன. தேசிய சிறுவர் திட்டங்கள், போரால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் வாழ்வைக்கட்டியெழுப்பும் விசேட திட்டங்கள், கண்காணிப்புக்குழுக்களின் செயற்பாடுகளினை ஒருங்கமைத்தல், வலுவாக்கல் என பல்வேறு அரச சுற்றறிக்கைகளினையும், நிதி ஒதுக்கீட்டினையும் சாத்தியமாக்கியது. இவற்றுக்குப் பொறுப்பாகப்




பல்வேறு அதிகாரிகளும் அரச இயந்திரத்தினுள் உள்வாங்கப்பட்டனர். எனினும், அரச அதிகாரிகளின் பின்புலமை, அர்ப்பணிப்புத்தன்மை, தொடர்பாடல் திறன், தெளிவான செயற்பாட்டு விளக்கம் என்பன அனைத்து பகுதிகளிலும் சீர்மயமானதாக இல்லை என்பது தொடர்ச்சியான குற்றச்சாட்டுதல்களாக இருந்து வருகின்றமை நோக்கத்தக்கது.

**(கட்டுரையின் எஞ்சிய பகுதி நாளை பிரசுரமாகும்)**

# தொடர்ந்த கதை முடிவதில்லை, தமிழர் வீட்டினிலே...

சட்டத்தரணி செ. ரவீந்திரன் (ஆஸ்திரேலியா)

காலைக்கதிரில் நான் எழுதிய இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைப் பற்றிய தொடர் வெளிவந்து கொண்டிருந்தபோது, என்னுடன் பேசியவர்களில் பலர் தமிழர்களின் பிரச்சினைகள் பற்றி எழுதுபவர்கள், வரலாறு பற்றி சொல்லுகிறார்களே தவிர, அவர்களின் எதிர்கால தலைவிதிக்கு வழி சொல்வதாகத் தெரியவில்லை என்றும் -


ஐன்ஸ்டீன்

பத்திரிகை ஆசிரியர் தலையங்கங்கள் கூட கடந்து வந்த பாதைகளின் வேதனைகளைப் பிரதிபலிக்கின்றனவே அன்றி, வழிகாட்டிகளாக இல்லை என்றும் - அங்கலாய்த்தார்கள்.

எனது தொடரின் முதல் அத்தியாயத்திலே எழுதியதைத்தான் மீண்டும் அவர்களிடத்தில் அறிவுறுத்தினேன்.

சர்வதேச ரீதியில் கனிந்து வரும் ஒரு காலத்தை தவறவிடாது, எமது வரலாற்றுத் தவறுகளை மீளப் பார்த்து, சமயோசிதமாக, எங்களுக்கு உரித்தான தன்னாட்சியைப்


சன்சோனி

பெறுவதற்கு வழிகளைக் காணுவதற்காகத்தான் நான் அவற்றைப் பதிவு செய்திருந்தேன்.

நான் எந்த அரசியல் கட்சியையோ, இயக்கத்தையோ அல்லது அமைப்பையோ சார்ந்தவனல்லன். தமிழ் அகதிகள் புனர்வாழ்வு கழகத்தோடு பணியாற்றிய காலங்களில் எல்லோருடனும் பொதுவாக இணைந்து செயலாற்றியதன் விளைவாக, தொடர்ந்த ஆர்வம்தான் அந்தத் தொடரை எழுதுவதற்கு பிரதான காரணம்.

எழுதப்பட்டவை எனது கருத்துக்களல்ல, அவை வரலாற்றின் சாட்சியப் பதிவுகள் மட்டுமே.

### தெவையான் அணுகுமுறை

என்னோடு இணைந்து செயற்பட்ட டக்ளஸ் தேவானந்தாவின் பெரிய தந்தையார் கே. சி. நித்தியானந்தா , கந்தசாமி, நடராஜா, கட்டிடக்கலைஞர் வி. எஸ். துரைராஜா, செனட்டர் நீதிராஜா, தொழில் அதிபர் வடிவேற்கரசன், மண்டூர் மகேந்திரன், விஸ்வலிங்கம், கனகராஜ நாயகம், பத்திரிகையாளர் சிவநாயகம் , பேராசிரியர் சிவத்தம்பி மற்றும் சன்சோனி ஆணைக்குழுமுன் தோன்றிய எத்தனையே சட்டத்தரணிகள் யாவருக்கும் அரசியலில் ஈடுபடவேண்டும் என்றோ அல்லது நாடாளுமன்றத்திற்கு செல்லவேண்டுமென்ற ஆசையோ அக்கறையோ இருக்கவில்லை.

தமிழ் மக்களின் அபிலாகைளையும் அவர்களின் நிலையையும் தேவைகளையும் முன்னிலைப்படுத்தி எம்மிடையே இருக்கும் வளங்களையும் சுட்டிக்காட்டினேன்.

மிக மிக அவசரமாக எமது அணுகுமுறை உள்ளூரிலும் சர்வதேசத்திலும் உருவாக வேண்டியதும் அதில் ஒன்று. தமிழ் மக்களை மையப்படுத்தி செயற்படக் கூடிய செயல்திறன் மிக்கவர்கள் ஈடுபடும் சில சிவில் சமூக அமைப்புக்களே இன்றைய தேவை.

அவற்றை ஒரு களஞ்சியமாக ஏற்று, அவற்றோடு இணையும் புத்திஜீவிகள், அரசியல் தலைவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கலாம்.

அதற்காக மகா சபைகள் தேவையில்லை. எங்களிடையே உள்ளூரிலும் அயல் தேசத்திலும் எத்தனையோ பெயர் போன, தகைமையுள்ளவர்கள் தொல்பொருள், சரித்திரம், தொழிற் திறமைகள் என்று பல துறைகளிலும் உள்ளனர். இவர்களிடம் தற்சமயத்துக்கு சர்ச்சைகளுக்கு உள்ளாக்கப்படும் தொல்பொருள் விவகாரம் மற்றும் காணிகளும் அவற்றின் சரித்திரமும் பற்றியும் ஆணித்தரமான அறிக்கைகளை பெறலாம்.

அதை விட்டுவிட்டு, அரசு தரப்பு அதைச் செய்கிறது, இதைச்செய்கிறது, எங்கள் இடங்கள் பறிபோகின்றன என்று வெறுமனே கூக்குரலிடுவதில் பயனில்லை. உரிமை உரிமை என்று சத்தம்போடுவதற்கும், உரிமையை ஆட்சியால் அனுபவித்து, அந்த உரிமையை தக்கவைப்பதற்கு வழிகள் காண்பது வேறு. அதை இன்னொரு அத்தியாயத்தில் பார்ப்போம்.

### மாவையின் அறிவிப்பு

ஆனால், மாவை சேனாதிராசா எடுத்த எடுப்பில் அவரது பாணியில், தன்னிச்சையாக 'தமிழர் தேசிய சபை' ஒன்றை முன்னாள் மனித உரிமை ஆணையாளர்களையும் இணைத்துக் கொண்டு உருவாக்கப்போகிறேன் என்று அறிவிக்கின்றார்.

அந்த அறிவிப்பைக் கண்டதும் எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. அதனைப் பற்றி சிலருடன் அளவளாவியதன் விளைவாக இதனை எழுத முற்பட்டேன்.

பெயர் பெற்ற பௌதீக பேராசிரியரும் நோபல் பரிசு பெற்றவருமான அல்பேர்ட் ஐன்ஸ்டீனை ஒரு முறை இஸ்ரேல் தங்களது பிரதமராக வரும்படி கேட்டபொழுது, அவர் மறுத்து, ஒரு அரசை நடத்துவது எப்படி என்று எனக்கு தெரியாது, என்னை எனக்குத் தெரிந்தவற்றை செய்ய விடுங்கள் என்று சொல்லி ஒதுங்கிவிட்டார்.


ஆயர் ராயப்பு ஜோசப்

மாவையின் முயற்சியும் அறிவிப்பும் ஒன்றுக்கொன்று ஒத்துவராதவை. ஐன்ஸ்டீனுக்கு கொடுத்த அழைப்பு மாதிரித் தான் மாவையின் அறிவிப்பு!

ஜஸ்மின் சூக்காவும் மற்றவர்களும் அரசியல்வாதிகள் அல்லர். அவர்கள் மனித உரிமை ஆர்வலர்கள் மட்டுமே.

இந்த வாரம் கந்த ஃஷ்டி. முருகப் பெருமானை வணங்கி, சூரசம்காரத்தின் பின், அவரது திருக்கல்யாணத்தில் பக்தர்கள் லயிப்பார்கள். இவற்றில் நாம் பூசைகளின் வெளிப்பாடுகளை பார்க்கிறோமேயன்றி, அதன் தத்துவங்களை மறந்து விடுகிறோம்.

முருகனின் பெருமைகளைப் பற்றி திருமுருக கிருபானந்தவாரியார் எவ்வளவோ பேசியும் எழுதியுமிருக்கின்றார். ஆனால், கே.எஸ். கோபலகிருஷ்ணன் "சாரதா" திரைப் படத்தில், வேல் சாதாரணமாக நாங்கள் பார்க்கும் மாதிரி ஆயுதமல்ல, அது அறிவின் வடிவம். சூரபத்மனை அந்த அறிவினால் வெல்ல பார்வதி முருகனுக்குத் தந்தது. - என்று சொல்லி விளங்கப்படுத்துவார்.




அறிவு கூர்மையானதாக இருக்க வேண்டும். கூர்மை மட்டும் போதாது. அது பரந்திருக்க வேண்டும். அவையிரண்டும் போதாது. அது ஆழமாகவும் இருக்க வேண்டும் என்றார்.

மாவையின் அறிவிப்பு வந்ததுமே, ஜஸ்மின் சூக்கா, தன்னை பிரஸ்தாபித்து வந்ததை நிராகரித்தமை, மாவையின் அறிவையும், அறிவிப்பையும் சர்வதேசம் எடைபோடத் தூண்டுகிறது.

இப்படி வாய்க்கு ஏற்றபடி, சிந்திக்காமல், உணர்ச்சியில், "மைக்கை" கண்டவுடன் பேசுவது, மாவைக்கு மட்டுமல்ல, பல தமிழ் தலைவர்களுக்கும் பொருந்தும் - செல்வநாயகத்


மாவை சேனாதிராசா

தைத் தவிர.

அவர் அறிந்துதான், சுருக்கமாக கடவுள்தான் இனித் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும் - என்று சொல்லி விட்டுக் கண்களை மூடினார்.

தன்னால் முடிந்தவரையில் செல்வநாயகம் தமிழ் மக்களை வழிநடத்திவிட்டு கண்களை மூடினார். ஆனால், அவருக்குப் பின்னால் வந்தவர்களோ, அவரையே மூடி விட்டார்கள்.

### மேடைப் பேச்சுகள் ஏற்படுத்திய சிக்கல்

2000 ஆம் ஆண்டு காலங்களில் ஈரோஸ் பாலகுமார் எனது நண்பர் ஒருவருக்குச. சொன்னதுதான், அந்தக் காலகட்டத்தின் பிரதிபலிப்பு. அந்த நண்பர், பாலகுமாரிடம் இப்படியே நீங்கள், அடிப்பம், பிடிப்பம் என்று இருந்தால், செல்வநாயகம் சொன்ன சமஷ்டியை என்றாவது கேட்கும் நோக்கமே உங்களுக்கு இல்லையா ..?" என வினவினாராம்.

அதற்கு பாலகுமார், அண்ணை, இப்ப புலிகளின் கைகளில்தான் எல்லாம். செல்வநாயகத்தைப்பற்றி அவர்கள் ஏன் அக்கறைப்படப்போகிறார்கள்? அவர்களது பிரசாரத்தால் நீங்கள் இன்று இந்தப் பகுதிகளில் துவக்குத் தூக்கித் திரியும் இளைஞர்களிடம் செல்வநாயகத்தை தெரியுமோ என்று கேட்டால், அவர்கள் 'யாரைக்கேட்கிறீர்கள்..? அந்த சைக்கிள் கடை செல்வநாயகத்தைத்தானே..?!' என்று சொல்வார்கள்."

வரலாற்றைப் புரிந்துகொள்ளாத பரிணாம வளர்ச்சி இது.

ஏனெனில் இப்படியான மேடைப் பேச்சுக்கள், ஆழமேதுமில்லாமல் எறிந்த வார்த்தைகள் - எங்களது சட்டத்தரணிகளுக்கு சன்சோனி ஆணைக் குழு முன் பல சங்கடங்களைக் கொடுத்தன.

மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசியதாக சொல்லப்பட்ட "சிங்களவரின் இரத்தத்தில் குளித்து அவர்களின் தோலில் செருப்பு தைத்துப் போடுவேன்" என்பது கலவரம் தொடங்கிய நாள்களிலிருந்து ஒருவருடத்திற்கு மேல் சிங்கள பத்திரிகைகளில் அட்டகாசமாகப் பிரசுரிக்கப்பட்டது.


கட்டுரையாளர்

சாட்சிக்கூண்டில் அமிர்தலிங்கம் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது, ஒன்றரை நாள்களுக்கு மேல் இந்தப் பேச்சுக்கள் பற்றி அவரிடம் வினவப்பட்டது.

(11ஆம் பக்கம் பார்க்க)

# மல்லாகம், பருத்தித்துறை நீதிமன்றங்களில் நினைவேந்தல் தடை மனுக்கள் ஒத்திவைப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.19

நவம்பர் 27ஆம் திகதி மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவ தற்குத் தடை கோரி தாக்கல் செய்யப்பட்ட பொலிஸாரின் மனுக்களை மல்லாகம் மற்றும் பருத்தித்துறை நீதிமன்றங்கள் ஒத்திவைத்துள்ளன.

**மல்லாகம் நீதிமன்றம்**

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம், கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயம் உட்பட காங்கேசன்துறை பொலிஸ் பிரிவில் மாவீரர் நாள் நினைவேந்தலை நடத்த தடை விதிக்கக் கோரி மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு நாளை பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் கொரோனா தனிமைப்படுத்தல் சட்டம் ஆகியவற்றைக் காரணம் காட்டி மாவீரர் நாள் நிகழ்வுகளைத் தடுப்பதற்கான கட்டளையை வழங்கவேண்டும் என்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் காங்கேசன்துறை பொலிஸார் இன்று மனுத் தாக்கல் செய்தனர்.

எதிர் மனுதாரர்களாக மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம், கீரிமலை நகுலேஸ் வரம் ஆலயம் ஆகியவற்றின் நிர்வாகம், பூசகர் ஆகியோர் உட்பட்டோர் குறிப்பிடப்பட்டனர்.

இந்த மனு நீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் தலைமையிலான 6 இற்கும் மேற் பட்ட சட்டத்தரணிகள் தோன்றினர்.

பொலிஸாரின் விண்ணப்பதில் உள்ள விடயம் தொடர்பில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் நாளை அழைக்கப்படவுள்ள நிலையில் பொலிஸார் இந்த விண்ணப்பத்தைத் தாக்கல் செய்துள்ளனர். அதனால் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யபட்ட எழுத்தாணை மனுவின் முடிவை வைத்து இந்த விண்ணப்பதை விசாரணைக்கு எடுக்கவேண்டும் என்று சட்டத்தரணி வி.மணிவண்ணன் மன்றுரைத்தார்.

அதனால் வழக்கை நாளை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைத்த மல்லாகம் நீதிவான் நீதிமன்றம், பிரதிவாதிகளுக்கு அறிவித்தலைச் சேர்ப்பிக்க உத்தரவிட்டது.

**பருத்தித்துறை நீதிமன்றம்**

பருத்தித்துறை நீதிமன்ற நியாயதிக்கத்துக்கு உட்பட்ட பகுதிகளில் நவம்பர் 27ஆம் திகதி மாவீரர் நாள் நினைவேந்தலை நடத்த தடைவிதிக்கக் கோரி பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு எதிர்வரும் 23ஆம் திததி திங்கட்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இலங்கை குற்றவியல் நடபடி சட்டக் கோவை 106ஆம் பிரிவின் கீழ் பொதுத் தொல்லையின் கீழ் இந்த விண்ணப்பம் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை மற்றும் நெல்லியடி ஆகிய 3 பொலிஸ் நிலை யங்களின் பொறுப்பதிகாரிகளால் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த விண்ணப்பம் இன்று பருத்தித் துறை நீதிமன்ற நீதிவான் காயத்திரி சைலவன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

எதிர் மனுதாரர்களாக நினைவேந்தலை நடத்தும் சிலரது பெயர்கள் குறிப்பிடப்பட்டன.

இந்த மனு அழைக்கப்பட்ட போது பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் சட்டத்தரணி விஸ்வலிங்கம் திருக்குமரன், சந்திரசேகரம், செலஸ்ரின் உள்ளிட்ட 6 இற்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் தோன்றினர்.

பொலிஸாரின் விண்ணப்பதில் உள்ள விடயம் தொடர்பில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் நாளை அழைக்கப்படவுள்ள நிலையில் பொலிஸார் இந்த விண்ணப் பத்தை தாக்கல் செய்துள்ளனர். அதனால் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யபட்ட எழுத்தாணை மனுவின் முடிவை வைத்து இந்த விண்ணப்பதை விசாரணைக்கு எடுக்கவேண்டும் என்று சட்டத்தரணிகள் மன்றுரைத்தனர்.

அதனால் வழக்கை வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை வரை ஒத்திவைத்த பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம், பிரதிவாதிகளுக்கு அறிவித்தலைச் சேர்ப்பிக்க உத்தரவிட்டது.

---

பயங்கரவாதத் தடைச் சட்டம், கொரோனா தனிமைப்படுத்தல் சட்டம் ஆகியவற்றைக் காரணம் காட்டி

# மாவீரர் நினைவேந்தலுக்கு வவுனியா, மன்னாரில் தடை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவம்பர் 19

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் எதிர்வரும் 27ஆம் திகதி மாவீரர்களை நினை வேந்துவதற்கு நீதிமன்றங்களால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் கொரோனா தனிமைப்படுத்தல் சட்டம் ஆகிய வற்றைக் காரணம் காட்டி இரு மாவட்ட நீதிமன்றங்களிலும் பொலிஸார் இன்று விடுத்த வேண்டுகோளுக்கு அமையவே இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பயங்கரவாத அமைப்பாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

'பயங்கரவாத அமைப்பைக் கொண்டாடு வது அல்லது அதற்கு ஆதரவை வெளிப்படுத் தும் நிகழ்வுகளைத் தனியாகவோ, குழுவாகவோ ஒழுங்கமைப்பதும், பங்கேற்பதும் சட்டத்துக்குப் புறம்பானதாகும்.

"மாவீரர் நாள் என்பது, தமிழீழ விடுத லைப் புலிகளால் கடைப்பிடிக்கப்பட்ட மரபுகளில் ஒன்று. விடுதலைப் புலிகள் இயக்கத் துக்குத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் இத்தகைய நிகழ்வுகளை நடத்த அனுமதிக்கப் படாது.

"அதேவேளை, கொரோனா தனிமைப் படுத்தல் சட்டம் நாட்டில் தற்போது நடைமுறையில் இருக்கின்ற போது அதை மீறிப் பொது வெளியில் மக்கள் ஒன்றுகூடி நிகழ்வுகளை நடத்தவும் அனுமதிக்கப்படக்கூடாது என வவுனியா, மன்னார் பொலி ஸார் அந்தந்த மாவட்ட நீதிமன்றங்களில் சமர்ப்பித்துள்ள தடை உத்தரவு கோரிய மனுக்களில் தெரிவித்துள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்று அச்சம் குறைவாகக் காணப்படும் வடக்கிலும், கிழக்கிலும் அரச நிகழ்வுகள், அமைச்சர் களின் நிகழ்வுகள் பிரமாண்டமாக நடை பெற்று வரும் நிலையில் தமிழர்களின் உணர்வு, உரிமை சார்ந்த நிகழ்வுகள் இந்த ஆட்சியில் கொரோனா தனிமைப்படுத்தல் சட்டம் மற்றும் பயங்கரவாத தடைச் சட்டம் ஆகிவற்றைக் காரணம் காட்டி அடக்கப்பட்டு வருகின்றன என்று தமிழ் உணர்வாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

---

நினைவேந்தல் தடை கோரி

# வடக்கில் 6 நீதிமன்றங்களில் வியாழன் ஒரே நாளில் மனுக்கள்

(ந.லோகதயாளன்)

மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடை செய்யக்கோரி வடக்கு மாகாணத்தில் 6 நீதிமன்றங்களில் இன்று ஒரே நாளில் பொலிஸாரால் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

வவுனியா, மன்னார், பருத்தித்துறை, மல்லாகம், யாழ்ப்பாணம் மற்றும் சாவகச்சேரி ஆகிய நீதிவான் நீதிமன்றங்களிலேயே குறித்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அதற்கமைய வவுனியா, மன்னார் நீதிவான் நீதிமன்றங்கள் பொலிஸார் கோரிய கட்டளையை வழங்கிய அதேநேரம் மல்லாகம் மற்றும் பருத்தித் துறை நீதிவான் நீதிமன்றங்கள் மனுக்களுக்குத் திகதியிட்டு அதனை ஒத்திவைத்தன.

சாவகச்சேரி மற்றும் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றங்கள் குறித்த விடயம் தொடர்பான மனுக்கள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டி பொலிஸார் இன்று தாக்கல் செய்த மனுக்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவில்லை.

---

# கரைச்சி பிரதேச சபையின் பட்ஜட் 7 மேலதிக வாக்குகளால் வெற்றி!





(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட கரைச்சி பிரதேச சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் 7 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப் பட்டது.

கரைச்சி பிரதேச சபையில் 35 உறுப்பினர்கள் உள்ள நிலையில் ஆளும் கூட்டமைப்பு வசம் 17 உறுப்பினர்களும், வெளியே 18 உறுப்பினர்களும் உள்ளனர்.

இந்தநிலையில், 2021ஆம் ஆண்டுக்கான வரவு –செலவுத்திட்டம் தவிசாளர் அ.வேழமாலிதனால் சமர்ப்பிக்கப்பட்டது. இதன்போது வாக்கெடுப்பு கோரப்பட்டது. இதன்பிரகாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 17 உறுப்பினர்க ளும், ஐக்கிய தேசியக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி , சுயேச்சைக் குழுவைச் சேர்ந்த தலா ஒருவருமாக மொத்தம் 20 பேர் ஆதரவாக வாக்களித்தனர்.

இதேவேளை, சுயேச்சைக் குழுவைச் சேர்ந்த 9 பேருடன் இணைந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் ஈ.பி. டி.பி. ஆகியவற்றில் ஒருவர் வீதமும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இருவருமாக 13 பேர் எதிராக வாக்களித்தனர்.

சுயேச்சைக் குழு மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றில்லிருந்து தலா ஓர் உறுப்பினர் வீதம் இருவர் சபைக்கு சமுகமளிக்கவில்லை.

---

தமிழ்க் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட

# நல்லூர் பிரதேச சபையின் 'பட்ஜட்' வியாழன் தோற்கடிப்பு

முன்னணி, ஈ.பி.டி.பி. கூட்டணி ஐ.தே.க. இணைந்து கவிழ்த்தன

(ந.லோகதயாளன்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக் குட்பட்ட நல்லூர் பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டம் இன்று தோற்கடிக்கப்பட்டுள்ளது.

20 உறுப்பினர்களைக் கொண்ட நல்லூர் சபையில் 11 உறுப்பினர்கள் வரவு – செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்தனர். ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினர் ஒருவர் நடுநிலைமை வகிக்க 8 உறுப்பினர்கள் மட்டுமே ஆதரவாக வாக்களித்தனர். இதை யடுத்து 3 மேலதிக வாக்குகளால் 'பட்ஜட்' தோற்கடிக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 6 உறுப்பினர்கள், பொ.ஐங்கரநேசன் தலைமையிலான சுயேச்சைக் குழுவின் 2 உறுப்பினர்கள் 'பட்ஜட்'டுக்கு ஆதரவாக வாக்களித்த போதிலும், ஏனைய கட்சிகளான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் 2 உறுப்பினர்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 5 உறுப்பினர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஒரு உறுப்பினர், ஐக்கிய தேசியக் கட்சியின் ஓர் உறுப்பினர் என 11 பேர் எதிராக வாக்களித்தனர்.

# கந்த சஷ்டியில் சூரசம்ஹாரம் ஏன் தெரியுமா?



கந்த சஷ்டி விழா முருகன் ஆலயங்களில் களைகட்டியுள்ளது. பக்தர்கள் காப்பு கட்டி விரதத்தை தொடங்கியுள்ளனர். சூரனை வேல் கொண்டு வதம் செய்த முருகனின் வெற்றியை போற்றும் விதமாக திருச் செந்தூரில் ஆண்டு தோறும் ஐப்பசி மாதம் வளர் பிறை சஷ்டி திதியில் கொண்டாடப் படுகிறது. ஐப்பசி அமாவாசைக்கு மறுதினம் பிரதமையில் விரதம் தொடங்கி ஆறு நாள்கள் அன்ன ஆகாரம் இன்றி விரதம் இருந்து முருகனை வணங்குகின்றனர். ஆறாம் நாள் சூரசம்ஹாரம் முடிந்து விரதம் முடிக்கும் பக்தர்கள் வெற்றிக்கு அடையாளமாக திருக்கல்யாணம் முடிந்து தங்கள் ஊர் திரும்புகின்றனர். காலம் காலமாக கொண்டாடப்படும் சூரசம்ஹாரத்தின் புராண கதையினை நாம் பார்க்கலாம்.

சிவபெருமானின் நெற்றிக்கண்ணில் இருந்த தோன்றிய அக்னியில் உருவானவர் ஆறுமுகப் பெருமான். சரவணப்பொய்கையில் இருந்த தாமரை மலர்களில் குழந்தைகளாக உருமாறி கார்த்திகைப் பெண்களின் கைபட்டு கந்தனாக வளர்ந்தார். அவரது அழகு அனைவரையும் கவர முருகன் ஆனார். முருகன் அவதாரமே சூரனை சம்ஹாரம் செய்வதற்காகத் தான் என்பதை உணர்த்துகிறது புராணம்.

சூரபத்மன் யார்? தேவர்களை எதிர்க்கும் அளவிற்கு தெம்பு எப்படி வந்தது? அவன் செய்த கொடுஞ்செயல்கள் என்ன சூரபத்மனை சுப்ரமணியர் எப்படி வதம் செய்து வெற்றி கொண்டார் என்று பார்க்கலாம்.

### சூரபத்மனின் சகோதரர்கள்

கஷ்யப முனிவருக்கும், மாயைக்கும் பிறந்த பிள்ளைகள், சூரபத்மன், சிங்கமுகன், தாரகன். சூரபத்மனுக்கு அசுரமுகம். தாரக னுக்கு யானைமுகம். சிங்கமுகனுக்கு சிங்கமுகம். இவர்கள், குலகுருவான சுக்கிராச்சாரியாரிடம் உபதேசம் பெற்று, சிவனை நோக்கித் தவமிருந்தனர். தவப்பயனாக 1008 அண்டங்களையும் ஆட்சிசெய்யும் வரம் பெற்றனர். சூரியன், சந்திரன், அக்னிதேவன், குபேரன் முதலிய தேவர்கள் அனைவரும், அசுரர்களின் பணியாளர்களாக மாறினர்.

### சிவனின் நெருப்பு பொறிகள்

தேவர்கள் பிரம்மாவிடம் சென்று தங்கள் நிலையைச் சொல்லி வருந்தினர். சூரபத்மனை அழிக்க சிவனால்



மட்டுமே முடியும். அதனால் அவரிடம் முறையிட்டால் விடுதலை கிடைக்கும் என்றார் பிரம்மா. தேவர்களும், கயிலாயம் சென்று சிவனிடம் முறையிட்டனர். அவருக்கு சத்யோஜாதம், வாமதேவம், தத்புரும், ஈசானம், அகோரம், அதோமுகம் ஆகிய ஆறு முகங்கள் உண்டு. அவற்றில் இருந்து ஆறு நெருப்புப் பொறிகளை உண்டாக்கினார்.

### சூரசம்ஹாரம்

அவை சரவணப்பொய்கையில் விழுந்து, குழந்தைகளாக மாறின. கார்த்திகை பெண்கள் வளர்க்க அவற்றை அன்னை பார்வதி ஒன்று சேர்த்த போது, கந்தன் ஆனார். அழகான அவர் முருகன் ஆனார். திருச்செந்தூரில் சூரபத்மனை போரிட்டு வென்று தேவர்களைக் காத்தார். ஐப்பசி மாதம் சஷ்டி திதியில் சூரசம்ஹாரம் நிகழ்ந்ததாக ஐதீகம். அதனால், கந்த சஷ்டியன்று முருகன் கோவில்கள் சூரசம் ஹாரம் நடைபெறுகிறது.

### வேல் கொடுத்த பார்வதி

முருகப்பெருமானுக்கு அன்னை பார்வதி தன் சக்தி மிகுந்த வேலை கொடுக்க, சூரபத்மனுக்கு எதிரான போருக்கு புறப்பட்டார். திருச்செந்தூரில் தன் படை பாசறையை அமைத்தார். பார்வதி தேவியின் பாத சிலம்பில் இருந்து தோன்றிய நவசக்தியர்களிடம் இருந்து நவ வீரர்களான வீரபாகுதேவர், வீரகேசரி, வீர மகேந்திரர், வீர மகேசுவரர், வீர புரந்தரர், வீராக்கதர், வீரமார்த்தாண்டர், வீராந்தகர், வீரதீரர் மற்றும் லட்சம் வீரர்களும் தோன்றி முருகனின் படைத் தளபதிகளாக விளங்கினர். சூரபதுமனையும் அவனு டன் சேர்ந்த அசுரர்களையும் அழித்து தேவேந்திரனுக்கு பட்டாபிகேம் செய்து தர்மத்தை நிலைநாட்ட புறப்படுவாயாக என்று கந்தனுக்கு, சிவபெருமான் அன்பு கட்டளையிட்டார்.

### தாரகாசூரன் சம்ஹாரம்

வெற்றி சங்கு முழங்கியது. மலர் மாரி பொழிந்தது. தேவசேனாபதியின் பெரும்படை செல்லும் வழியில் கிரவுஞ்சமலை எதிர்பட்டது. அம்மலைக்கு அதிபதியான சூரபத்மனின் தம்பியாகிய தாரகாசூரனை சம்ஹாரம் செய்து அவன் மார்பில் அணிந்திருந்த திருமாலின் சக்ராயுதமாகிய செம்பொன் பதக்கத்தை முருகன் பெற்றார்.

### சூரபத்மன் மகன் பானுகோபன்

முருக பெருமானின் படைகள் ஆரவாரத்துடன் புறப்பட்டனர். சூரபத்மன் மகன் பானுகோபன் புறப்பட்டு வந்து முருக பெருமான் படையோடு போரிட்டு படுதோல்வி அடைந்து புறமுதுகு காட்டி ஓடினான். 3ஆம் நாள் போரில் பானுகோபன் கொல்லப்பட்டான். அடுத்து சிங்கமுகா சூரன் சிங்கமென சீறிப் பாய்ந்து போர்க்களம் வந்தான். ஆனால் முருகபெருமானின் வேல், சிங்கமுகாசூரனை சம்ஹாரம் செய்து அவனும் கொல்லப்பட்டான்.

அடுத்து சூரபத்மனின் தலைமை அமைச்சர் தருமகோபன், சூரபத்மன் மக்கள் மூவாயிரம் பேரும் கொல்லப்பட்டனர். முடிவில் எஞ்சி நின்றது சூரபதுமன் மட்டுமே.

### சூரசம்ஹாரம்

பெரும் படையுடன் சூரபத்மன் போருக்கு வந்தான். மிக அற்புதமாக மாயப் போர் புரிந்தான். முருகனது வேலில் இருந்து தப்பிக்க மிருகங்கள், பறவைகள், மரங்கள் என மாறி மாறி மாயத்தால் தப்பினான். முருகனின் சக்தி வேல் திருச்செந்தூர் அருகே உள்ள மரப்பாடு என்ற மாந்தோப்பில் மாமரமாக மறைந்திருந்த சூரபத்மனை இருகூறாகப் பிளந்து சம்ஹாரம் செய்தது. சூரபதுமன் ஆணவம், அகங்காரம் ஒழிந்தது. இரண்டும் சேவலாகவும், மயிலாகவும் மாறி முருகப்பெருமான் கொடியாகவும் வாகனமாகவும் மாறியது.

### புனித நீர் நாழிக்கிணறு

சூரனை சம்ஹாரம் செய்த முருகனது வேல் கங்கைக்கு சென்று நீரில் மூழ்கி தோம் நீங்கி மீண்டும் முருகனது கைகளில் வந்தது. அதை கடற்கரை ஓரத்தில் பூமியில் குத்த, உள்ளே இருந்து நீர் பீறிட்டு வெளிவந்தது. அந்த நீர்தான் நாழிக்கிணறு நீரானது. அந்த நீரையும், மணலையும் சேர்த்து சிவலிங்கம் செய்து முருகன் சிவபூஜை செய்தார். விண்ணும் மண்ணும் குளிர்ந்தது. தேவர்கள், முனிவர்கள் மலர் மாரி பொழிந்தனர்.

### முருகன் - தெய்வானை திருக்கல்யாணம்

தேவாதி தேவர்கள் புடைசூழ திருப்பரங்குன்றம் என்ற தலத்துக்கு முருக பெருமான் வந்தார். குன்றத்தில் தவம் செய்து வந்த ஆறு முனிவர்களுக்கு திருவருள் புரிந்தார். ஆறுமுனிவர்களும் முருக பெருமானை தேவதச்சனால் நிர்மாணிக்கப்பட்ட பொன் வண்ண கோவிலினுள் எழுந் தருள செய்தனர். தேவேந்திரன் தன் மகளாகிய தெய்வானையை மணம் முடிக்க விரும்பினார். திருப்பரங்குன்றத் திலே மங்கள மண நாள் அன்று ஈரேழு பதினான்கு லோகங் களும் வியக்கும் வண்ணம் இந்திரனும் அவன் மனைவி இந்திராணியுடன் தெய்வானையின் கைபிடித்து முருகனிடம் ஒப்படைத்தனர். திருமணம் அதி அற்புதமாக நடந்தேறியது. சிவபெருமான் – பார்வதிதேவியை முருகன் – தெய்வானை மூன்று முறை சுற்றி வந்து வழிபட்டனர். பின் நால்வரும் திருமணத்துக்கு வந்த அனைவரையும் ஆசீர்வதித்தனர்.

# தாண்டிக்குளத்தில் விபத்து; மூவர் வைத்தியசாலையில்



வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் ஹன் ரர் ரக வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் நின்ற மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் மூவர் காயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள் ளனர்.

நேற்று பிற்பகல் இடம்பெற்ற இந்த விபத்து குறித்து மேலும் தெரியவருவதாவது:-

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ஹன்ரர் ரக வாகனம் வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் பய ணித்தபோது வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் நின்ற மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. இதன் காரணமாக குறித்த வாகனத்தின் சாரதி உள்ளிட்ட இருவர் படுகாயமடைந்துள்ளனர். அத்துடன் அந்த வீதி வழியாக வந்த மோட்டர் சைக்கிள் ஒன்றும் குறித்த விபத் துக்குள்ளான வாகனத்துடன் மோதி விபத் துக்குள்ளாகியதில் ஒருவர் படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்த மூவரும் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த விபத்து குறித்து வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (100)





# ஓட்டுமடத்தில் விபத்து 3 வாகனங்கள் மோதின

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் ஓட்டுமடச்சந்தியில் நேற்றுப் பிற்பகல் 3 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி கோர விபத்துக்குள்ளாகின.

விபத்துச் சம்பவத்தில் 3 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். நகரிலிருந்து ஆறுகால்மடம் நோக்கி பயணித்த ஓட்டோ மீது அந்த வீதி ஊடாக யாழ்.நகரம் நோக்கி பயணித்த பட்டா வாகனம் கட்டுப்பாட்டை இழந்து மோதியதுடன், அதே திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள் மீதும் மோதி விபத்துக்குள்ளாகி யிருக்கின்றது.

படுகாயமடைந்தவர்கள் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பாடசாலைகள் மீண்டும் 23 ஆம் திகதி ஆரம்பம்!

## மேல் மாகாணம், தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகள் தவிர

இலங்கை கொரோனாவின் தாக்கத்துக்கு முகம் கொடுத்துள்ள நிலையில் மேல் மாகாணம் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகள் தவிர நாட்டில் ஏனையப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் மூன்றாம் தவணைக்கான கல்வி நடவடிக்கை நவம்பர் 23 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

தரம் 6 முதல் 13 வரையான மாணவர்களே பாடசாலைகளுக்கு வரவேண்டும் எனவும் அவர் கூறினார்.

மேல் மாகாணம் மற்றும் தனிமைப் படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள மாணவர்கள் வெளியிடங்களில் உள்ள பாடசாலைகளுக்குச் செல்ல முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# தவமியற்ற முத்திதரும் தலம்

ஈழத்துச் சிதம்பர யாத்திரை 03

வே.வரதசுந்தரம்



காசியில் இறந்தால் வீடுபேறு. சிதம்பரத்தில் நடராசர் திருநடனத்தைத் தரிசித்தால் வீடுபேறு. திருவாரூரில் பிறக்க வீடுபேறு. திருவண்ணாமலையைச் சிந்தித்தால் வீடுபேறு. ஈழத்துச் சிதம்பரத்தில் தவமியற்ற வீடு பேறு.

திண்ணபுரம் யாத்திரை வந்த சிவனடியார்கள் இத்தலச் சிறப்பினை அறிந்து இருகைகூப்பிக் கண் ணீர்மல்கி 'ஓம் நமசிவாய, ஓம்நமசிவாய'என்று பிரார்த் திப்பர்.

**காசியில் இறக்க வீடாம் தில்லையிட் காணவீடாம்**
**பேசிடும் ஆரூர்தன்னில் பிறந்திட வீடாம் பெட்பார்**
**தேசுரும் அருனைதன்னைச் சிந்திக்க வீடாமென்பர்**
**மாசிலிப் பதியில் நீடு மாதவஞ் செய்தால் வீடாம்!**

இவ்வாறான சிந்தனை, எண்ணம் இம்மக்களி டையே மலர்வதற்குக் காரணம் நிறையவுண்டு. வெறும் நம்பிக்கை மட்டுமன்று. அதற்கும் மேலாக நிறைய ஆதாரங்கள் உள. ஈழத்துச் சிதம்பரத்தில், திண் ணபுரத்தில் தவமிருந்து வீடுபேறு பெற்றோர் பலர். இம்முனிவர்களின் வரலாறு, அற்புதம் ஆகியவற்றை ஈழத்துச் சிதம்பர புராணம் விரிவாகப் பேசும்.

திருக்கோயில் உருவாவதற்கு நெடுங்காலத்துக்கு முன்னரே தவமியற்றுவதற்கு ஏற்புடைப் பெருவெளி யாகத் திண்ணபுரம் திகழ்ந்துள்ளது. அக்காலத்தே அது ஏகாந்தப் பெருவெளியாக இருந்தது. தவநிலையைக் குழப்ப ஏதுவான எதுவும் அங்கிருக்கவில்லை. நீண்ட கடலலை அசைவற்று அடங்கி நிற்ப, இறைவனுடன் வேறறக் கலந்து நிற்க, அங்கிருந்த இயற்கைச் சூழல் சாதகமாக இருந்தது.

### தூர்வாச முனிவர்

தூர்வாசர் என்ற முனிவர் திண்ணபுரத்தின் வட கிழக்கே தூம்பில் என்ற பிரதேசத்துக்கு வருகை தந்தார். கரையோரக் கடற்பிரதேசமும், பரந்த வெளியும் அவரது தவத்துக்கு வாய்ப்பான இயற்கைச் சூழலாக அமைந்



தூர்வாச முனிவர்

தன. இம்முனிவர் இங்கு தவமியற்றி வாழ்ந்த இடம் தூர்வாசகிரி என்று அழைக்கப்பட்டது. இம்முனிவர் நாள்தோறும் தீர்த்தமாடித் தனது பாவங்களைக் களைந்த தீத்த்தம் 'தூர்வாச சாகரம்' என்றாயிற்று. அம்முனிவர் 'நீராடி வினைதீர்த்த அருந்தீர்த்தம் செம்மைதரு தூர் வாசசாகரமென் றோதுவரால்' இவ்வாறு திண்ணபுரத்தில் பல்லாண்டு தவமியற்றி உலகப்பற்றினை ஒழித்து வீடுபேறு அடைந்தார்.

### அகத்திய முனிவர்

காசியில் அந்தணர் குலத்துதித்த அகத்தியர் தனது தந்தையாரின் பிரிவினால் துயருற்று அறச்செயல்க ளாற்றித் தனது வலிமையால் ஆகாய மார்க்கமாக யாழ்ப்பாணக் குடாநாடு வந்தார். காரைநகர் களபூமி யிலிருந்து தவஞ்செய்தார். பின்னர் தூம்பில் பிரதேசத்தி ன் சிறப்பினை அறிந்து அங்குசென்று காரைமர நிழலில் குடிலமைத்துத் தவமியற்றினார். அகத்தில் மறைந்து நிற்கும் உட்பகைகளான காமம், குரோதம் முதலியன வற்றை வென்றார்.

**புண்ணியர்கள் தவம்புரிந்த புதுமைதரு தூம்பிலினில்**
**நண்ணுமொரு காரைமர நன்னிழற்கீழ் குடில்சமைத்தே**
எனப்பாடும் புராணம்.

ஈற்றில் அகத்தியர் பல்லாண்டு தவமியற்றி, பகல், இரவு என்னும் வேறுபாடு தெரியாது தியானத்தில் இருந்து சமாதிநிலை எய்தினார். உண்மை ஞானம் கைகூடி வீட்டின்பம் துய்த்தார்.

### தினகர முனிவர்

திண்ணபுரத்தில் சைவப்பணியாற்றிய இவரைப் 'பொய்யறு தினகரப் புனிதன்' என்பர். பொய்மை ஆகிய உலகப் பற்றினைத் துறந்தவர் என்று பொருள். துளுவ நாட்டில் பிறந்த இப்பெரியார் இந்தியாவில் பல தலங்க ளுக்கு யாத்திரை சென்று, இறுதியில் காரை நாட்டில் உள்ள வளங்கள் மிக்க வலந்தலைக் குறிச்சிக்கு வந்தார். காரை நாட்டுச் சிறுவர்கட்கு அவ்வூர்த் திண்ணைகள் தோறும் கல்வி ஊட் டினார். சைவ ஆசாரத்தை அவ்வூர் மக்களுக்கு ஊட்டினார். திண்ணைகளில் அமர்ந்து கவி பாடியமையால் 'திண்ணைக்கவி' என்றழைக் கப்பட்டார்.

இவர் காரைநாட்டுக்கு வந்தகாலத்தில் அவ்வூரில் சிவஞான வைரவர் ஆலயம் பிரசித்தி பெற்றிருந்தது. அவ்வூர் மக்களைச் சிவஞான வைரவர் கண்ண தனை இமை காப்பதுபோல் காப்பார் என்பது அம்மக்களின் நம்பிக்கை. இவ்வாலயத்தின் கண்ணே இப்பெரியார் ஆலங்கன்று ஒன்றை நாட்டினார்.

திண்ணபுரத்தில் தினகர முனிவர் தவமியற்றி மும் மலங்களுடன் கட்டுப்பெற்ற புனர்நிலையாம் பெத்த நிலை நீங்கி இறைவனுடன் கலந்த முத்திநிலை பெற்றார்.

### ஆண்டி முனிவர்

இராமநாதபுரத்தில் சேதுக்கரையினைக் காவல் செய்த மறக்குடிவீரர் குலத்தோன்றல் ஆண்டி முனிவர். தனது நாட்டில் பல திருத்தலங்களுக்கு யாத்திரை செய்த ஆண்டி முனிவர் இலங்கைத் தலங்களை வழிபடவேண்டி இங்கு வந்து கதிர்காமம் போன்ற தலங்களுக்குக் கால்நடை யாக யாத்திரைசென்று வழிபாடு இயற்றினார். இறுதி யில் காரைநாட்டில் வியாவில் பதிக்குப் பிரிந்த கன்று தாய்ப் பசுவை நாடுமாறு வருகை தந்தார்.

வியாவில் பதியில் இருந்த குளக்கோட்ட மன்னன் கட்டிய எழுநிலைக் கோபுர ஐயனார் கோயில் ஒல்லாந் தரால் இடிக்கப்பட்டதை அறிந்து வேதனையுற்றார். அவ ரது கனவில் ஐயனார் தோன்றி தூர்வாசகிரியில் உள்ள அரசமரத்தடிக்கு வருமாறு பணித்தார். நெடிய திருமால் போன்று அரசமரம் காட்சியளித்தது. அரசமரத்தடியில் தான்வழிபாட்டுக்குக் கொணர்ந்த சூலத்தை நாட்டினார். அரசமரத்தடியில் தவஞ்செய்தார். ஆங்கே ஓர் ஒளி தோன்ற அவ்விடத்தை அகழ்ந்த போது ஐயனாரின் தொல்லுருவம் கண்டு அதனைப் பக்குவமாக எடுத்தார் ஆண்டி முனிவர். அங்கு ஐயனார் உருவத்தைப் பிரதி ஷ்டை செய்தார்.

**அடியனேன் குடியை யாண்ட ஐயனே அமரர் கோமான்**
**கடிமலர்க் கூந்த லாளைக் காத்தருள் கடவுள் போற்றி!**
**மிடிபிணி நீக்கி நாளும் விளங்கிடச் செய்வோய் போற்றி!**
**துடியிடைப் பவளச் செவ்வாய்த் தோகையர் துணைவா போற்றி!**

இறுதியில் ஐயனாரின் பேரருளினால், ஆண்டி முனி வர் ஆணவமலம் முற்றாக வலிகெட மலரிபாக நிலை யுற்றுச் சிவசொரூபத்தைக் கண்டு பேரின்பப் பெருவாழ்வு பெற்றார்.

இத்தலத்திலே கோயில் வளர்ச்சி கருதி பிடியரிசி மரபுண்டு. அது தொடர்பாக சிவகுரு என்பார் கூறும் கருத்தினைப் பார்ப்போம்.

'அன்று நான் அரையில் சீலையில்லாத குழந்தை. கிழவரொருவர் நூறு, நூற்றைம்பது பனை ஓலைக்குட் டான்களுடன் எங்கள் வீட்டுப்படலையைத் திறக்கிறார். வீட்டுமுற்றத்தில் நின்ற எங்கள் 'பொலிசு' நாய் குரைத் துக்கொண்டு அவரை விரட்டுகிறது. குசினியில் இருந்த எனது தாயார் ஓடிவந்து நாயை விரட்டிவிட்டுக் குட்டான் களுடன் வந்த கிழவருக்கு ஒருவருக்கும் இல்லாத உபசாரம் வழங்குகிறார். எனக்கு வியம் ஒன்றும் புரிய வில்லை. நானும் ஒர. குட்டானை எனக்குக் கொடுக்கும்படி சண்டை போடுகிறேன். தாயாரிடம் இருந்து அடிதான் கிடைத்தது.

கிழவர் வேறுயாருமல்லர். சிவன்கோயில் மணிய காரர் மாசிலாமணி. தாயாரிடம் கொடுக்கப்பட்டது பிடி யரிசிக் குட்டான். அது அடுப்பங்கரையில் தூக்கப் பட்டது. நாளுக்குநாள் பானையில் அரிசியைப் போட முன்னர் குட்டானில் ஒரு பிடி அரிசி இடுவோம். அது இறைவனுக்கு அர்ப்பணம்.

(தொடரும்)



அகத்திய முனிவர்

# நாட்டு மக்களுக்கு கிடைத்த அதிஷ்டம் மஹிந்த ராஜபக்ஷ!

## ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே .எம். முஸம்மில் புகழாரம்

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்த நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கு கிடைத்த அதிஷ்டம் என ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே .எம். முஸம்மில் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் 75 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டும், கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து நாட்டைப் பாதுகாக்கவும் வேண்டி ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே .எம். முஸம்மில் தலைமையில் பதுளை பிரதான ஜும்ஆப் பள்ளிவாசலில் சமய நிகழ்வொன்று நடைபெற்றது.

இந்த போது உரையாற்றிய ஆளுநர் ஏ.ஜே .எம். முஸம்மில் –

'மஹிந்த ராஜபக்ஷ இந்த நாட்டின் கலாசார அமைச்சர், அனைத்து மதங்களையும் மதிப்பவர், அவர் போன்ற ஒரு தலைவர் இந்த நாட்டுக்குக் கிடைத்து இந்த நாட்டு மக்களின் அதிர்ஷ்டம், மென்மேலும் இந்த நாட்டுக்காகச் சேவை செய்ய அவருக்கு நீண்ட ஆயுள் வேண்டிப் பிரார்த்திப்போம்' எனத் தெரிவித்தார்.

சர்வமத நிகழ்வுகளுடன் நடைபெற்ற இந்த சமய நிகழ்வில் பதுளை முதியங்கான ரஜமகா விகாரைக்கு பொறுப்பான மலகல சந்திம தேரர், இஸ்லாம், கத்தோலிக்க மற்றும் இந்து மதத் தலைவர்கள், ஊவா மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரொஷின் வீரசிங்க, பதுளை நகர மேயர் பிரியந்த அமரசிரி, ஊவா மாகாண பிரதான செயலாளர் பி.ஐ. விஜயரத்ன, ஆளுநரின் செயலாளர் நிஹால் குணரத்ன உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்து சிறப்பித்தனர்.

# கொரோனா தொற்றிலிருந்து 316 பேர் குணமடைந்தனர்!

கொழும்பு, நவ.20

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் 316 பேர் பூரணமாக குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, கொரோனா வைரஸ்தொற்றில்இருந்து இதுவரையில் குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 12 ஆயிரத்து 903 ஆக அதிகரித்துள்ளது.

இதனையடுத்து, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான 5 ஆயிரத்து 430 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

இலங்கையில் இதுவரையில், 18 ஆயிரத்த 402 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், இந்தத் தொற்றுக்கு உள்ளான 69 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாணத்தில் 127 பேருக்குத் தொற்று!

கிழக்கு மாகாணத்தில் இதுவரையில் கொரோனா தொற்றாளர்களாக 127பேர் அடையாளம் காணப்பட் டுள்ளனர் என கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்தியர் அழகையா லதாகரன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் (புதன் கிழமை) மூன்று கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் பணிப்பாளர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தில் நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

நேற்றுமுன்தின்தினம் அடையாளம் காணப்பட்டவர்களில் ஒருவர் அக்கரைப்பற்றில் அடையாளம் காணப்பட்டவர். இவர் கொழும்பு – அக்கரைப்பற்று தனியார் பஸ் சாரதியாகக் கடமையாற்றுபவர். சாரதியுடன் நேரடியாகத் தொடர்புபட்டவர்களைத் தனிமைப்படுத்து வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று மட்டக்களப்பு கோறளைப்பற்று மத் திய பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பேலியகொட மீன்சந்தையுடன் நேரடியாகத் தொடர்புபட்டவருக்கு தொற்று உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் ஏற்கெனவே சுயதனிமைப்படுத்தலில் உள்ளவர்.

அதேபோன்று ஆரையம்பதி சுகாதார பிரிவின் ஒல்லிக்குளம் பகுதியில் 37 வயதுடைய பெண்ணொருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். இவரும் கொழும்புக்குச் சென்றுவந்தவர். இவருடன் நேரடியாகத் தொடர்புகொண்டவர்களை தனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணாத்தில் ஐந்து வைத்தியசாலைகளில் கொரனா நோயாளர்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். – எனத் தெரிவித்தார்.

# பேலியகொடை சந்தையின் நிர்மாணப் பணிகள் நிறைவு

கொழும்பு, நவ.20

பேலியகொட பிரதேசத்தில் 15 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்ட புதிய சந்தையின் நிர்மானப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. இந்த சந்தை விரைவில் திறக்கப்படவுள்ளது.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் உள்ளமையுடன், விசாலமான வாகனத் தரிப்பிடம், ஊழியர்களுக்கான ஓய்வு அறை, குளிரூட்டல் அறை, வங்கி வசதிகள் உட்பட பல வசதிகளும் இந்த சந்தையில் ஏற்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மண்முனை தென் எருவில்பற்று பிரதேசசபையின் வரவு செலவுத்திட்டம் ஏகமனதாக நிறைவேற்றம்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட மட்டக்களப்பு மண்முனை தென்எருவில்பற்றுப் பிரதேசசபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட விசேட அமர்வு நேற்று (வியாழக்கிழமை) சபைத் தவிசாளர் ஞா.யோகநாதன் தலைமையில் இடம்பெற்றது.

சபையின் பிரதித் தவிசாளர், உறுப்பினர்கள், பிரதேச சபை நிர்வாக உத்தியோகத்தர் கலந்து கொண்டிருந்த நேற்றைய அமர்வில் 2021ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்ட அறிக்கை தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது. வாதப் பிரதிவாதங்கள் இன்றி அனைத்து உறுப்பினர்களின் ஏகோபித்த ஆதரவுடன் இந்த வரவு – செலவுத் திட்ட அறிக்கை சபையில் நிறைவேற்றப்பட்டது.

21 உறுப்பினர்களைக் கொண்ட மேற்படி சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 10 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் 04 உறுப்பினர்களும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் 02 உறுப்பினர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் 02 உறுப்பினர்களும், ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 02 உறுப்பினர்களும், சுயேச்சைக் குழு உறுப்பினர் ஒருவரும் அங்கம் வகிக்கின்றனர்.

மேற்படி வரவு செலவுத் திட்ட விசேட கூட்டத்தினைப் பார்வையிடுவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நடாளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம் ஜனா மற்றும் கிழக்கு மாகாணசபை முன்னாள் பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் ஆகியோர் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தொடர்ந்த கதை முடிவதில்லை...

**(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

வவுனியா சிவசிதம்பரம் பேசியதாக சொல்லப்பட்ட "நாங்கள் கல்லும், பொல்லும் எடுத்தல்ல , துப்பாக்கிகள் இல்லாவிட்டாலும், வேலும் வாளும் கொண்டு போரிடுவோம்" என்பதும், இப்படியாக மேலும் இளைஞர்கள் பேசிய வீர வசனங்கள் யாவும் அன்று பணியாற்றிய தமிழ், முஸ்லிம் பொலிஸ் உத்தியோகத்தர்களினால் குறிப்பெடுக்கப்பட்டு மொழி பெயர்ப்புச் செய்து தங்கள் தங்கள் திணைக்களங்களுக்கு கொடுக்கப்பட்டிருந்தன.

இவை 1976 ஆம் ஆண்டு தேர்தல் காலத்தில் பேசப்பட்டவை என்று சொல்லப்பட்டது.

அதற்கு ஓரிரு வருடங்களுக்கு முன் மாவை சேனாதிராசா உட்பட பல இளைஞர்கள் வன்முறைகளில் ஈடுபட்டனர் எனவும் வன்முறையைத் தூண்டும் பிரசாரக் கூட்டங்கள் நடத்தினர் எனவும் வாக்கு மூலங்கள் பெறப்பட்டு, அவர்கள் பேசிய உணர்ச்சிப் பேச்சுகளும் பேசிய திட்டங்களும் சன்சோனி ஆணைக்குழு முன் வந்தது.

தமிழர் கூட்டணி வன்முறையைத் தேர்தலுக்காக தூண்டியதனால்தான் சிங்களவர் ஆத்திரமடைந்தமையைத் தொடர்ந்து, கலவரம் வெடித்தது என்றும், அதற்கு சிங்கள மக்களையோ அரசாங்கத்தையோ குறை சொல்ல முடியாது என்றும் அரசின் சட்டத்தரணிகள் நியாயப்படுத்த முனைந்தார்கள்.

இவற்றுக்கு அன்று நாங்கள் தாக்குப்பிடிக்க வேண்டியிருந்தது. அதில் ஒன்று, மாவை, கல்வியங்காடு அருகேயுள்ள கொண்டலடி வைரவர் கோவிலில், இளைஞர்களோடு நடத்திய கூட்டத்தில் பேசிய பேச்சுக்களும், செயற்றிட்டங்களும் பற்றியவை.

அவரதும், அவரது சகாக்களினதும் வாக்கு மூலங்கள், அவற்றைப் பிரதிபலித்தன.

இவை பற்றி பொலிஸ் உத்தியோகத்தர்களைக் குறுக்கு விசாரணை செய்யும்போது, அதில் இருந்த மொழிபெயர்ப்புகளிலேயே குறை கண்டு அர்த்தங்களைத் திசை திருப்ப வேண்டியிருந்தது.

பாரிய குறுக்கு விசாரணையின்போது, சாட்சிகள் மங்கையற்கரசி அமிர்தலிங்கம் பல இடங்களில் அவ்வாறு சாரப்பட பேசியிருந்தாலும் அதே வார்த்தையில் ஒரு கூட்டத்தில் எடுக்கப்பட்ட குறிப்பு பொலிஸ் திணைக்களத்திற்குள்ளே கண்டுபிடிக்கப்படவில்லை எனக் கைவிரித்தார்கள்.

அதில் வவுனியா சிவசிதம்பரம், குறுக்கு விசாரணையில் கேட்கச் சொன்ன கேள்வி பல காலம் எங்களுக்கு வியப்பை தந்தது. அவர் கேட்கச் சொன்னது "வேலுண்டு எங்களுக்கு வினையில்லை, வேல், வேல் வெற்றி வேல்" – என்பதை மொழி பெயர்க்கச்சொல்லி சாட்சியிடம் கேட்கச் சொன்னார். சாட்சியால் முடியவில்லை. இப்படிப்பட்ட கோவிலடிப் பேச்சுக்களால், மாவை நீர்கொழும்புச் சிறையில் மற்றவர்களோடு வாடினார்.

இந்த வேல்தான் எங்கள் வினைகளை இனி மேல் தீர்க்க வேண்டும்.

**ஆசையும் லட்சியமும்**

ஆசைக்கும் லட்சியத்துக்கும் நிரம்ப வித்தியாசம் உண்டு. ஆசை கணத்துக்குக் கணம் தோன்றி மறைவது. லட்சியம் கண் விழிக்காது கணத்துக்கு கணம் நெய்யூற்றி வளர்க்கப்படுவது. தண்ணீர் நூறு டிகிரி உஷ்ணமடைந்தால்தான் ஆவியாகும். ஒரு ரயிலைக் கூட ஓட்டும். ஆனால், நூறிலிருந்து ஒரு டிகிரி இறங்கி விட்டாலும் பிரயோசனமில்லை. அது போலவே விடுதலை என்பது லட்சியம் போன்று நாளுக்கு நாள் கண்ணும் கருத்துமாக வளர்க்கப்பட வேண்டும்.

அவை தேர்தலுக்கு தேர்தல் வரும் ஆசைகளல்ல. அல்லது அதற்காக பேசப்படும் உணர்ச்சி வசனங்களோ, திட்டங்களோ அல்ல.

எங்களது அபிலாகைக்குத் தேவையான கட்டமைப்புகள் பற்றி காலத்துக்கு காலம் பலர் அறிவுறுத்தல் செய்திருக்கின்றார்கள். இவையெல்லாம் கூட்டங்களுக்குப் பின் பெட்டிகளில் போடப்பட்டு ஆசனப் பங்கீடுகள்தான் முக்கியம் பெற்றன. விடுதலைப் போராளிகளிடையே வீரமும் அஞ்சாத நெஞ்சும் இருந்தது. அவர்கள் செய்த தியாகங்கள் மறக்க முடியாதவை. ஆனால், அவர்களின் கட்டமைப்பில் அந்த வெற்றிகளை ஏணிப்படிகளாகப் பாவித்து கோபுரங்களாக்க முடியவில்லை.

அதற்காக இடித்துரைத்த புத்திஜீவிகளும் அழிக்கப்பட்டார்கள். அல்லது ஓரங்கட்டப்பட்டார்கள்.

போர்ச் சூழ்நிலைக் காலங்களிலும் அதன் முடிவிலும் அரசியல்வாதிகளை விட ஓர் ஆளுமை மிக்கவராக மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் இருந்தார். போரைப் பற்றியும் மனித உரிமைகள் சார்ந்தும் அவர் வெளியிட்ட அறிக்கைகள் சர்வதேசத்தால் உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டன. போரின் பின் எவ்விதத்தில், எந்தக் கட்டமைப்புகளில் நாங்கள் முன்னேற்ற வேண்டும் என அவர் எல்லாக் கூட்டமைப்புத் தலைவர்களையும் மன்னாரில் அழைத்து ஆலோசனை சொன்னார். எல்லோரும் செய்வோம் என்று சொல்லிவிட்டு வந்தார்கள்.

ஆனால் 'கேட்பது திருவாசகம் இடிப்பது சிவன் கோவில்' என்பது போல அவர்கள் செய்தது மாகாண சபை அங்கத்தவர்களாக இடங்களுக்குப் போட்டியிட்டதும், மாகாண சபையில் குத்து வெட்டுப்பட்டு வழக்குகள் ஆடியதும்தான். ஆயரது ஆலோசனைப்படி நடைபெற்றது என்ன?

ஒரு சின்னச் சபை கூடத் தமிழ்த் தேசிய கட்சிகளின் ஒற்றுமையைப் பேண இன்றுவரை அமைக்கப் படவில்லை. மாகாண சபைத் தேர்தல் வரலாம் என்ற செய்தியில் எப்படி வாக்குகளை அதிகரிக்கலாம், ஆசனங்கள் பெறலாம் என்ற சிந்தனையே மேலோங்கி நிற்கிறது.

### சிங்களவர் பக்கம் நடப்பவை என்ன?

தமிழ்த் தேசியக் கட்சிகள் எல்லாம் மாவீரருக்கு நினைவும் அஞ்சலியும் நடத்தப்பட வேண்டும் என்று அரசாங்கத்துடன் முண்டியடிக்க, அதே கூட்டமைப்பின் அங்கத்தவர் சுமந்திரனோ, தான் சிங்கள மக்களிடையே வாழ்ந்தவன், அதனால் பிரச்சினைப்படவில்லை என்றும் போராளிகள் விடுதலைக்கு ஏற்றுக்கொண்ட வழிமுறைகள் தனக்கு ஏற்புடையது அல்ல என்றும் கருத்துக்கள் கூறுகிறார்.

அந்தக் கோமாளித்தனங்கள் எங்கள் பக்கத்தில் நடந்துகொண்டிருக்க, சிங்களவர் மத்தியில் திட்டமிட்ட குடியேற்றங்கள், தொல்பொருள் பின்னணியில் காணிகள் அபகரிப்பு என்பன நடைபெறுகின்றன. சர்வதேசத்திலும் நாட்டிலும் ஊடகங்களிலும் சிங்கள புத்தி ஜீவிகள், சட்டத்தரணிகள் மூலமாக இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை எப்படி தவிர்ப்பது, 33 வருட காலங்களின் பின் நாடு இன்று இருக்கும் சூழ்நிலையில் இன்று அதனை தொடர்ந்து நடைமுறைபடுத்த வேண்டிய தேவை உண்டா? காலங் கடந்து சென்றுவிட்டதால் அது காலாவதியாகிவிட்டது என்ற நிலைப்பாட்டை எடுக்கவேண்டும் என்று அறிவுறுத்துகிறார்கள். அப்படி எடுத்தால் என்ன விளைவு வரும்..? அதே போன்று போர்க்குற்ற விசாரணை விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கை எடுத்தாலும், அது எவ்வளவு காலம் போகும்? சர்வதேச நீதிபதிகளை எதிர்த்தால் அல்லது நாங்கள் விலகியதால் ஏற்படும் விளைவுகள் அவ்வளவு பாரதூரமானதாக இருக்காது என்று அரசாங்கத்துக்கு வலுவூட்டும் காலணொளிகள் நடந்துகிறார்கள்.

எங்களது தமிழ் பிரதேசங்கள் 33 வருடங்களின் பின்னர் எப்படியுள்ளன? ஒப்பந்தத்தின் அடிப்படையில் நமக்கு கோரப்படும் தமிழ் பிரதேசங்கள் எவை? அவற்றின் வரைபடம் ஏதாவது எங்களின் அரசியல் தலைவர்களிடம் உள்ளதா எனக்கேட்டால் "ஓம் ஒன்று இருக்க வேண்டும், அவரிடம், இவரிடம்...!" என்று பேச்சிருக்குமே தவிர, வரை படம் வராது.

சிங்கள மக்கள் கடந்த அறுபது வருடம் காலத்தை கடத்தியது போல இன்னும் சில வருடங்களுக்கு இந்தப்பிரச்சினையை இழுத்தடிப்பதையே ஒரு மருந்தாகப் பாவித்துவிட்டால் எங்களுக்குள் இருக்கும் ஒற்றுமையின்மையும் குழிபறிக்கும் குணமும் புற்றுநோய்போன்று எங்களுடைய தேசியத்தை அழித்துவிடும் என்று அவர்கள் கணக்குப்போடுகிறார்கள்.

பேச்சுக்கும் செயற்றிறனுக்கும் இதுதான் வித்தியாசம்.

காலைக்கதிர் Kalaikkathir

# நவீன உள்ளக விளையாட்டரங்கு யாழ். பல்கலையில் திறந்து வைப்பு





யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தில் நவீன வசதிகளுடன் கூடிய பிரமாண்டமான உள்ளக விளையாட்டு அரங்கு துணைவேந்தரால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

நாட்டில் தற்போது எழுந்துள்ள கொவிட் – 19 நிலைமைகளைக் கருத்தில் கொண்டு, சுகாதார நடைமுறைகளுக்கமைய மட்டுப்படுத்தப்பட்டவர்களுடன் திறப்புவிழா இடம்பெற்றது

தற்போதைய துணைவேந்தரும், முன்னாள் விஞ்ஞான பீடாதிபதியுமாகிய பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, இலங்கை பல்கலைக்கழக விளையாட்டு விழாவுக்கான ஏற்பாட்டுக் குழுவின் தலைவராகச் செயற்பட்ட காலத்தில் முன்வைக்கப்பட்ட திட்ட முன்மொழிவுக்கமைய 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணத்தினால் அடிக்கல் நாட்டப்பட்டு நிறைவு செய்யப்பட்ட கட்டடத் தொகுதி 2020 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது.

சுமார் ஆயிரம் பேர் ஒரே நேரத்தில் அமர்ந்திருக்கக்கூடிய வசதியைக் கொண்டுள்ள இந்த உள்ளக விளையாட்டரங்கு சர்வதேசத் தர நியமங்களுக்கமைய அமைக்கப்பட்டுள்ளது. பேராதனை மற்றும் ருகுண பல்கலைக்கழகங்களில் உள்ளக விளையாட்டரங்குகள் காணப்படுகின்ற போதிலும், இலங்கையில் வேறெந்தப் பல்கலைக்கழகங்களிலும் இத்தகைய வசதிகளைக் கொண்ட உள்ளக விளையாட்டரங்கு இதுவரை அமைக்கப்படவில்லை. சுமார் இருநூற்றி எட்டு மில்லியன் ரூபா செலவில் இந்த விளையாட்டரங்கு அமைக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மைதானத்தின் தென் கிழக்கு மூலையில் அமைக்கப்பட்டுள்ள இந்த உள்ளக விளையாட்டரங்கு திறப்பு விழா நிகழ்வு பல்கலைக்கழக உடற்கல்விப் பணிப்பாளர் கே.கணேசநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு உறுப்பினரும், யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம் கல்வெட்டைத் திறந்து வைக்கயாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா உள்ளக விளையாட்டரங்கைத் திறந்து வைத்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு மட்டுமல்லாமல், தேவைநாடும் சகலரும் இந்த உள்ளக விளையாட்டரங்கைப் பயன்படுத்துவதற்கேற்ற முறையில் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உடற் கல்வி அலகுடன் தொடர்புகொண்டு பதிவு செய்து, அனுமதி பெற்று, இங்குள்ள உள்ளக விளையாட்டு வசதிகளை விளையாட்டுத்துறை சார்ந்தோர் பயன்படுத்த முடியும் என்றும் –

இதே நேரம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கின் இடப்பற்றாக்குறை காரணமாகப் பல அமர்வுகளாக நடாத்தப்படும் பல்கலைக்கழகப்பட்டமளிப்பு விழாவினை இம்முறை ஒரே நாளில் இந்த அரங்கில் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## ஈ.பி.ஆர்.எல்.எவ். – சு.க. கூட்டாட்சியிலுள்ள வவுனியா நகர சபை பட்ஜட்டும் வென்றது

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையில் ஈ.பி.ஆர்.எல்.எவ். மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டில் உள்ள வவுனியா நகர சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டம் நேற்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

வவுனியா நகர சபை அமர்வு தவிசாளர் இ.கௌதமன் தலைமையில் நேற்றுக் காலை கூடியது.

இதன்போது தவிசாளரால் சபையில் அடுத்த ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டது.

இதனை ஆதரித்து ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் லரீப் அவர்கள் முன்மொழிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் ஜக்கரியாஸ் சலின்டன் வழிமொழிந்தார்.

இதையடுத்து தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பான ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, ஈ.பி.டி.பி. ஆகிய கட்சிகளைச் சேர்ந்த 19 உறுப்பினர்களின் ஆதரவுடன் வரவு – செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் பி.யானுஜன் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பான ஈ.பி.ஆர்.எல். எவ். உறுப்பினர் பாஸ்கரன் ஜெயவதனி ஆகியோர் வரவு – செலவுத் திட்டம் நிறைவேற்றிய பின்னரே சபைக்கு சமுகமளித்திருந்தனர்.

வவுனியா நகர சபையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியைச் சேர்ந்த இ.கௌதமன் தவிசாளராகவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சு.குமாரசாமி உப தவிசாளராகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (100)







புகழ்பெற்ற நல்லூர் கந்தசுவாமி கோயிலில் நேற்று மாலை முருகப் பெருமானின் விஸ்வரூப தரிசனமும் சூரன் திக்விஜயமும் இடம்பெற்றது.

மிகவும் எளிமையாக நடைபெற்று வரும் இந்த ஆண்டு கந்தசஷ்டி விழாவில் சிறிய உருவிலான வாகனங்களும் சூரனும் உட்பிரகாரத்திலே உலா வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**படங்கள் - ஐ.சிவசாந்தன்**

## கொழும்பில் விசேடமாக அம்புலன்ஸ் வசதி

கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பிரதேசத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் இன்று முதல் விசேட அம்புலன்ஸ் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது.

இது தொடர்பான மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக 0113 422 558 என்ற இலக்கத்திற்கு அழைப்பு விடுக்குமாறு தெரிவிக்கப்படுகின்றது.


## தெல்லிப்பளை வித்தகபுரம் பொற்கலம்தம்பை ஞாவைரவர் ஆலய புதிய நிர்வாக சபைத் தெரிவிற்கான பொதுக்கூட்டம் – 2020

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு இலக்கம் HA/ 5/JA/171 இல் பதிவு செய்யப்பட்ட தெல்லிப்பளை வித்தகபுரம் பொற்கலம்தம்பை ஞாவைரவர் ஆலய புதிய நிர்வாக சபைத் தெரிவிற்கான பொதுக்கூட்டம் எதிர்வரும்22.11.2020 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு பிரதேச செயலகத்தில் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆலயப் பொதுக் கூட்டத்தை நடாத்துமாறு ஆலய நிர்வாக சபைக்கு பிரதேச செயலாளரால் பல்வேறு தடவைகள் கடிதங்கள் அனுப்பப்பட்ட போதும் நிர்வாக சபையால் கூட்டம் கூட்டப்படாமையால் ஆலய உபயகார்கள் ஒன்று சேர்ந்து ஆலய வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு மேற்படி கூட்டத்தை பிரதேச செயலகத்தில் நடாத்த முடிவு செய்துள்ளார்கள். எனவே மேற்படி கூட்டத்தில் ஆலயத்தில் உபயங்களை கொண்டுள்ள உபயகாரர்களில் ஒரு உபயத்திற்கு ஒருவர் என்ற ரீதியில் மேற்படி கூட்டத்தில் முகக்கவசம் அணிந்து சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளுடன் கலந்து கொள்ளுமாறு தங்களைக் கேட்டுக் கொள்கின்றோம். மேற்படி கூட்டம் நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் 19 நோய் தொற்றின் காரணமாக பாதுகாப்புக் காரணங்களுக்காகவும் உறுதிப்படுத்தப்பட்ட உயகாரர்களை அழைப்பதற்காகவுமே பிரதேச செயலகத்தில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

**இவ்வண்ணம்**
**ஆலய உபயகாரர்கள்**



## கல்யாணமாலை
### வட சர்வதேச திருமண சேவை

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி - 1981.09.26 | பிறந்த திகதி - 1991.02.09 |
| மதம் - இந்து V | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - பூசம் | நட்சத்திரம் - கேட்டை |
| சூ/ செவ் - 9இல் | பாவம் - ----- |
| கல்வி - ஹோட்டல் முகாமைத்தும் | செவ் - 12 1/4 |
| தொழில் - முகாமையாளர் | கல்வி - MBBS |
| எதிர்பார்ப்பு - படித்த அழகான பெண் | தொழில் - Doctor |
| | எதிர்பார்ப்பு - Doctor OR Engineer |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

077 3434 415
077 8578 528


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.11.2020 இல் வெளியிடப்பெற்றது.

# கொரோனாவுக்குப் பின்னரான உலகம் இயற்கைக்கான தருணம்

## வடமாகாண மரநடுகை மாதம்

## கார்த்திகை 1-30, 2020



## ஆளுக்கொரு மரம் நடுவோம்
## நாளுக்கொரு வரம் பெறுவோம்

கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

விளம்பர அனுசரணை:- காலைக்கதிர் Kalaikkathir